

# தமிழரசு

8-1977 50 காசு.





# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"



# தமிழரசு

மலர் : 8 இதழ் : 3

1—8—1977

## இந்த இதழில்

அட்டைப்படம்
நமது
குடியரசுத்
தலைவர்

| | பக்க எண் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் 1977-78-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.. .. | 4 |
| படமும் செய்தியும் .. | 27 |
| வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும்! .. | 33 |
| நமது குடியரசுத் தலைவர் (வாழ்க்கை வரலாறு) .. .. | 43 |
| கல்வியே ஆற்றல்!.. .. .. | 45 |
| எல்லாரும் பாராட்டும் கல்வி ஒலிபரப்புகள் .. .. | 47 |

தமிழ்நாடு அரசின் 1977-78-ஆம் ஆண்டு

## நிதிநிலை அறிக்கையின்

### சிறப்பு அம்சங்கள்!

* அடிப்படைத் துறைகளான வேளாண்மை, பாசனம், மின்சக்தி, தொழில்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் அளித்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* குடிநீர் வழங்கல், கல்வி, நல்வாழ்வு, அரிசனங்கள்—பழங்குடிகள் — பின் தங்கிய வகுப்பினர் நலன் முதலிய சமூகப் பணிகளுக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப் பட்டுள்ளது.

* நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது 260 கோடி ரூபாய் அளவில் இருந்த நடப்பு ஆண்டுத் திட்டம், இப்போது 263.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

* கிராமப்புறங்களிலும் தொழில்களைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையுடன், அடுத்த 12 மாதங்களில் 10,000 சிறுதொழில்கள் தொடங்கவும், குறைந்தது இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

* கைத்தறி வளர்ச்சிக்குத் தலையாய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

* அரிசன—பழங்குடி மாணவர்களுக்கு எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி; பள்ளி இறுதி வகுப்பு வரை இலவசப் புத்தகங்கள்!

* வறுமையில் வாடிடும் விதவைகள் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெற உதவித் தொகை அளிக்கப்படும். அவர்தம் குழந்தைகளுக்குப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும்.

* அகால மரணமடையும் மீனவர்களின் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் மானியம்!

* கிராமப்புற மக்களின் உடல் நலம் காக்க நடமாடும் மருத்துவமனைகள்!

* ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு மாதந்தோறும் 75 ரூபாய் உதவித் தொகை!

* கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு நிலப்படை!

* அரசு அலுவலர்களுக்குக் கூடுதல் அகவிலைப் படி; மூன்றாவது ஊதியக்குழு!

* அரசுப் பரிசுச் சீட்டு தொடர்ந்து நடைபெறும்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுடன் , மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் திரு கே. மனோகரன் அவர்கள் 1977-78-ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுவதற்காக எடுத்துச் செல்கிறார்.



மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் திரு கே. மனோகரன் அவர்கள், 1977-78-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை 25-7-1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்து உரையாற்றினர்.

# தமிழ்நாடு அரசின்

# 1977-78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை

**தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு கி. மனோகரன் அவர்கள் 1977–78ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25ஆம் நாளன்று ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1976–77ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும் 1977–78ஆம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் முன் ஒப்புதலுக்காக வைக்கிறேன்.

2. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கு வேண்டிய மானிய முன் அனுமதி, தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவியபோது நாடாளுமன்றத்தில் பெறப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இப்போது இந்த ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆண்டு நிதி ஒதுக்கீட்டுக்கு அதன் ஒப்புதலைக் கோருகிறோம். இப்புதிய அரசு பதவியேற்றபின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளை மாற்றியமைக்க அவகாசமும் வாய்ப்பும் போதிய அளவில் இல்லாதிருந்த போதிலும், இந்த ஒதுக்கீடுகளை விரைவாகப் பரிசீலனை செய்து நமது முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் அவசியமான இடங்களில் அவற்றை மாற்றியமைத்துள்ளோம். இதே முறையில் நடப்பாண்டில் நாம் முன்னுரிமை அளிக்கும் திட்டப் பணிகளுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளையும் மாற்றங்களையும் தொடர்ந்து செய்வோமென அவையினருக்கு உறுதி கூறுகிறேன்.



**கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால் சமுகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.**

**—பேரறிஞர் அண்ணா**

3. பொதுவாக இந்தியா முழுவதிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் நிலவுகிற பொருளாதார நிலையையொட்டி வரவு-செலவுத் திட்டத்தை நாம் தயாரிக்க வேண்டியுள்ளது. விலைவாசி நிலையாக ஒரு சில காலம் இருந்தபின், தற்சமயம் அனைத்திந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்கச் சக்திகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. தென் உணவு மண்டலம் உருவாக்கப்பட்டு, தமிழ் நாட்டில் உணவுத் தானியங்களின் விலைவாசி உயர்வு பெரும்பாலும் கட்டுக்கடங்கியிருந்தது என்றாலும், சமையல் எண்ணெய்கள், வணிகப் பயிர்கள், தொழிற்சாலைகளில் தயாரிக்கும் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, அதே நேரத்தில், வளர்ச்சியை ஊக்குவித்து வேலைவாய்ப்புகளைப் பெருக்கவேண்டும். இதற்கான நிதி நிர்வாகக் கொள்கைகளையும் வரிவிதிப்புக் கொள்கைகளையும் வகுக்கும் அதிகாரம் பெரிதும் மத்திய அரசிடமே உள்ளது. தேசியப் பொருளாதாரக் கொள்கைகளை இவ்வாறு செம்மையான முறையில் நிறைவேற்றுவதில் மத்திய அரசுக்கு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு அளிப்பதோடு, நிதி இடர்ப்பாடுகளோ முன்னுரிமைகளில் முரண்பாடுகளோ ஏற்படாத வகையில், முதலீடும் பொதுநலனும் பெருக, நாம் மாநிலத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டியுள்ளது. உடனடித் தேவைகளுக்கும் குறுகிய காலத் தேவைகளுக்கும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்யும்போது, தமிழ் நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்குரிய தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். பற்றாக்குறை நிதி நிலையைத் தவிர்க்க வேண்டும்; அதே நேரத்தில், வரிச்சுமையை மேலும் மேலும் உயர்த்த முடியாது. அரசு அலுவலர்கள், ஏனைய அலுவலர்கள் ஆகியவர்களின் கோரிக்கைகளைக் கருதிப் பார்ப்பதுடன், மாநில வளர்ச்சிக்கும் மக்களின் இன்றியமையாத் தேவைகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதும் அவசியம். விலைவாசிகளை உயர விடாமல் பொருள்களின் உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் பெருக்கவேண்டும். நடைமுறையிலிருக்கும் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும்; இதே நேரத்தில், புதிய திட்டங்கள் பலவற்றையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் வரவு-செலவுத் திட்டத்தை வகுக்கும்போது எல்லாப் பிரச்சினைகளையும் சீர்தூக்கிச் சமன் செய்யும் நோக்குடன் அணுக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

4. மத்திய-மாநில நிதி உறவுகள் சீராக இல்லாதிருக்கும் இப்போதைய நிலை குறித்து, திரு எம். சி. செதல்வாடு அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆய்வுக் குழு செய்த அறிக்கையின் தொடக்கத்திலேயே பொருத்தமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அறிக்கையில் சொல்லியிருப்பதாவது :

“ அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதி ஆதாரங்களையும் பொறுப்புகளையும் பிரித்துக் கொடுத்திருக்கும் முறை எப்போதும்


மத்திய அரசுக்கு உபரியையும் மாநில அரசுகளுக்குப் பற்றுக்குறையையும் விளைவித்து வருகிறது. கூட்டாட்சி அமைப்பு எதிலும் நிதி ஆதாரங்களையும் பொறுப்புகளையும் துல்லியமாகச் சமன்படுத்த இயலாதெனினும், இந்தியாவில் மத்திய அரசுக்கு மிகச் சாதகமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. எனவே, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி உறவுகளின் மிக முக்கியமான அம்சம், மத்திய அரசு எப்போதும் வழங்கும் நிலையிலும் மாநில அரசுகள் எப்போதும் வாங்கும் நிலையிலும் இருப்பதுதான்.”

சமூக நலக் கொள்கையான மதுவிலக்கால் ஏற்படும் வருவாய் இழப்பு காரணமாக, ஏனைய பெரும்பாலான மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ் நாட்டின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு உணர்வர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளில் ஒன்றாகிய மதுவிலக்கைச் செயற்படுத்துவதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவேண்டுமென்று மத்திய அரசிடம் பலதடவை முறையிட்டும் அதனை அவர்கள் ஏற்காதது நமக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறது. ஏழாவது நிதிக் குழு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, தமிழ் நாட்டின் நலன்களைப் பொறுத்த அளவில், இதிலும் முக்கியமான பிறவற்றிலும் நமது கோரிக்கைகளை வலியுறுத்துவோம்.

**அரசியல் குறுக்கீடு கூடாது!**

நாலரைக் கோடி தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது எந்த அரசியலும் குறுக்கிட்டுவிடக் கூடாது என்பது ஒன்றுதான் எனது அக்கறையே தவிர, வேறு எதுவுமல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன்.

—முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர்




### ஆண்டுத் திட்டம்

5. அடிப்படைத் துறைகளான வேளாண்மை, பாசனம், மின் சக்தி, தொழில்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் அளித்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில், 1977-78 ஆண்டுத் திட்டத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதே நேரத்தில், குடிநீர் வழங்கல், கல்வி, சுகாதாரம், அரிசனங்கள்-பழங்குடி மக்கள்-பின்தங்கிய வகுப்பினர் நலன் முதலிய சமூகப் பணிகளுக்கும் சிறப்புக் கவனம் அளித்துள்ளோம். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நடப்பு ஆண்டுத் திட்டம் 260 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இது இப்போது 263·5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. முக்கியத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வருமாறு: மின் சக்தி 94·9 கோடி ரூபாய்; பாசனம் 24·7 கோடி ரூபாய்; வேளாண்மையும் தொடர்பான துறைகளும் 30·2 கோடி ரூபாய்; தொழில்கள் 13·8 கோடி ரூபாய்; போக்குவரத்தும் சாலை வசதியும் 25·2 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றலும் 26·5 கோடி ரூபாய்; கல்வி 13·3 கோடி ரூபாய்; ஏனைய சமூக-பொருளாதாரப் பணிகள் 34·9 கோடி ரூபாய்.

## வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளும்

6. தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, 1976-77ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தி தமிழ் நாட்டில் ஓரளவு குறைந்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த ஆண்டில், ஒரு துரித மதிப்பீட்டின்படி, உணவுத் தானிய உற்பத்தி 74 இலட்சம் டன் என மதிப்பிடப்படுகிறது; கரும்பு (வெல்ல) உற்பத்தி 13·5 இலட்சம் டன் எனவும், எண்ணெய் வித்துக்கள் 13·4 இலட்சம் டன் எனவும், பருத்தி 3·6 இலட்சம் பொதிகள் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளன. நடப்பாண்டில் உணவுத் தானியங்கள் 84 இலட்சம் டன் அளவும், கரும்பு (வெல்ல) உற்பத்தி 14 இலட்சம் டன் அளவும், எண்ணெய் வித்துக்கள் 14·9 இலட்சம் டன் அளவும், பருத்தி 4 இலட்சம் பொதிகள் அளவும் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கிட்டுள்ளோம். இக் குறிக்கோள்களைக் குறைவின்றி எய்த அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்வோம்.

7. அரசு விதைப் பண்ணைகளை விரிவுபடுத்தவும் மிகு பயன் தரும் பயிர் விதைகளை அதிக அளவில் பகிர்ந்தளிக்கவும் ஆண்டுத் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். நாம் முன்னுரிமை அளித்துள்ள மற்றொரு துறை மண்வளப் பாதுகாப்பாகும். வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென 302 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டம் புன்செய் சாகுபடிப் பகுதிகளுக்குக் குறிப்பாக நன்மையளிக்கும். மேலும், இத்திட்டம் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் உதவும். வணிகப் பயிர்கள், கறிகாய், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் வேளாண்மையைப் பலதிறப்படுத்த சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும். வேளாண்மைப் பொருள்களுக்கு விற்பனை வசதிகளை விரிவுபடுத்த இதுவரை போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இதற்கெனத் தனிப்பட்ட இயக்குநர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளோம். அங்காடிக் குழுக்கள் விவசாயிகளுக்கு நற்பணியாற்றவும், மாநிலம் முழுவதிலும் உள்ள விற்பனை வசதிகளைப் பெருக்கவும் இது உறுதுணையாயிருக்கும். இதனால் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை பெறுவார்கள். நிபுணர் குழு செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் பயிர் காப்புறுதித் திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்து வருகிறது. இத்திட்டத்தை விரைந்து கொண்டு வருமாறும் தமிழ் நாட்டில் இத்திட்டத்தைப் பரவலாகச் செயற்படுத்துமாறும் மத்திய அரசை வேண்டியுள்ளோம்.

8. மீனளத் துறையைப் பொறுத்தவரை இடைத்தரகர்கள் நடவடிக்கைகளைக் குறைத்து, நாளடைவில் அவற்றை நீக்குவதன் மூலமாக மீனவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதே எங்கள் கொள்கையாக இருக்கும். இதன் பொருட்டு, கடன் வசதி, விற்பனை வசதி, பதப்படுத்தும் வசதி ஆகியவை இணைப்பாக அளிக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து கடல் மீன் முதலியவற்றைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பல வசதிகளை அரசாங்கம் நேரடியாகவும், கூட்டுத் துறையின் மூலமாகவும் வழங்க முற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் தூத்துக்குடியில் மீனளக் கல்லூரி ஒன்று நடப்பாண்டில் தொடங்கப்படும். கடல் மீனளத்தைப் பெருக்குவதற்கான வழக்கமான வேலைத் திட்டங்களுடன் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்ப்பதற்கான திட்டங்கள் பலவற்றையும்

வகுத்துள்ளோம். கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 15 கிராம முக்கிய வட்டாரங்கள் அமைக்கப்படும். ஐந்து கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும். பாலைப் பதப்படுத்தவும், பால் மாவு, கால்நடைத் தீவனம் தயாரிக்கவும், ஈரோடில் 3 கோடி ரூபாய் மொத்தச் செலவில் புதிதாகப் பாற்பண்ணை அமைக்கப்படும். காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 51,104 ஏக்கர் பரப்பில் மரங்கள் நடப்படும்.

9. மாநில நிலவள வங்கி கடனளிக்கும் திட்டத்திற்காக, அதற்கு அரசு 145 இலட்சம் ரூபாய் உதவும்; இந்த உதவி பெற்று நிலவள வங்கி விவசாயிகளுக்கு 18 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்க இயலும். நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்களையும், பதப்படுத்து கூட்டுறவு நிறுவனங்களையும் (Processing Societies) இன்னும் பல இடங்களில் வலுப்படுத்தலும், செலவுக் கடனும் நகைகளின் மேல் கடனும் கொடுக்க நிதி வசதிகளைப் பெருக்குதலும், இம் மாநில அரசு, கூட்டுறவு வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளவிருக்கும் ஏனைய முக்கியமான திட்டங்களாகும்.

### பாசனம்

10. 1975-76ஆம் ஆண்டில் பாசன முதலீடு 11·9 கோடி ரூபாயாக இருந்தது. இத் தொகை 1977-78ஆம் ஆண்டில் இரு மடங்கிற்குமேல் அதாவது 24·7 கோடி ரூபாயாக உயருமென்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த காலத்தில், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் போதுமான ஒதுக்கீடு செய்யாமலேயே பாசனத் திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டன; இதனால், இத்திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கும் காலதாமதமாயிற்று. நடப்பாண்டில் ஏழு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு வேண்டிய நிதி ஒதுக்கியுள்ளோம். இவற்றால் புதிதாக 35,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்; ஏற்கெனவே பாசன வசதி பெற்றுவரும் 77,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் செண்பகத்தோப்பு என்னுமிடத்தில் கமண்டலாற்றுக்குக் குறுக்கே 3·55 கோடி ரூபாய் செலவில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பது நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் முக்கியமான புதிய திட்டமாகும். இந்த நீர்த்தேக்கத்தால் 1,962 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறுவதுடன், ஏற்கெனவே பாசனம் பெற்றுவரும் 10,386 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி உறுதிப்படும்.

11. காவிரி கழிமுகப் பகுதியில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் தமிழ் நாட்டில் பழைய பாசன அமைப்புகளில் பாசன நீரைச் செவ்வையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதன் அவசியத்தை நன்கு புலப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக, காவிரி கால்வாய்களைச் சீரமைக்கும் பணி விரைந்து செயற்படுத்தப்பட வேண்டும். இப்பணிக்காக வரவு-செலவுத் திட்டத்தில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கி உதவி அளிக்க முடிவு செய்துள்ளது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். இத்திட்டத்திற்கு மொத்தம் 41·04 கோடி ரூபாய் செலவாகும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 3·16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 38,000 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறுவதுடன் இப்போது பாசனம் பெற்றுவரும் நிலங்களுக்கும் பாசன வசதி உறுதிப்படும்.

## 1977-78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை

12. சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி, குளங்களைத் தூர்வாரிச் சீரமைக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் 4·7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுபாசனத் திட்டங்களுக்காக அரசே இவ்வாறு முதலீடு செய்வது தவிர, பாசனக் கிணறுகள் தோண்டுவதற்காக உழவர்களுக்கு உதவி செய்ய, கூட்டுறவுத் துறையில் நிதி ஒதுக்கீடு உள்ளது. கிராம மின் வசதித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஏறக்குறைய 30,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும். நம் மாநிலத்தில், குறிப்பாக மேற்பரப்பு நீர் அநேகமாகப் பயன்படுத்தப் பட்டுவிட்டதைக் கருதிப் பார்க்கும்போது, நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பது அவசியம். எனினும், பெரும்பாலான பகுதிகளில் நிலத்தடி நீர் உரிய அளவுக்கு அதிகமாகவே இறைக்கப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இதனால் ஆண்டுக்காண்டு நிலத்தடி நீர் மட்டம் தாழ்ந்து விடுகிறது. இந்த நிலைமை நீண்டகால நோக்கில் தீமை பயப்பதாகவும் தமிழ் நாட்டின் எதிர்கால நன்மையைப் பாதிப்பதாகவும் உள்ளது. வரும் மாதங்களில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கும் அதன் பயனை முறைப்படுத்துவதற்கும் இந்த பிரச்சினையை எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய அரசு முற்படும்.

### மின் சக்தி

13. தமிழ் நாட்டில் மின் உற்பத்தித் திறன் தற்போது 2,364 மெகாவாட்டாகும். 1977–78-ல் குந்தா-IV விரிவு நிலைத் திட்டமும் சுருளியாறு திட்டமும் செயற்படத் தொடங்கும். இதனால் மின் இணைப்பு ஏற்பாட்டில் 145 மெகாவாட் கூடுதலாகக் கிடைக்கும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கு (2×210 மெகாவாட்) 43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செவ்வனே செயற்படுத்தப்பட்டு வருகிறதென இந்த அவைக்கு உறுதி கூறுகிறேன். முதல் பிரிவு 1978 டிசம்பர் மாதத்தில் செயல்படத் தொடங்கும்; இரண்டாவது பிரிவு 1979 ஜூன் மாதத்தில் செயல்படத் தொடங்கும்.

14. மின் சக்தி வளர்ச்சி தொடர்ந்து திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டிய பணியாகும். நெய்வேலியில் தற்போதுள்ள சுரங்கத்தினை வைத்து 200 மெகாவாட் அனல் மின் நிலையம் ஒன்று தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதை நாம் வரவேற்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்குரிய விரிவான ஆய்வுப் பணிகளுக்கு மத்திய அரசு அனுமதித்துள்ளதும் வரவேற்கத் தக்கதாகும். இந்த ஆய்வுப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்க முடிவுகள் எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நெய்வேலியில் மாபெரும் அனல் மின் நிலையம் அமைக்க வேண்டியது அவசியம். கல்பாக்கம் அணு சக்தித் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் தமிழ் நாட்டில் இரண்டாவது அணுசக்தி நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசிடம் கேட்டுள்ளோம்.

15. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மூன்றாவது பிரிவைத் (210 மெகாவாட்) தொடங்கும் திட்டம் ஒன்றை நாம் ஏற்கெனவே தயாரித்துள்ளோம்; இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் விரைவில் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணியை நடப்பாண்டிலேயே தொடங்க வேண்டுமென்பதும் முதல் இரண்டு பிரிவுகள் செயல்படத் தொடங்கிய பின்னர், இயன்ற விரைவில், மூன்றாவது பிரிவு இயங்க வேண்டும் என்பதும் நமது நோக்கமாகும்.

16. மின் சக்தி உற்பத்தித் திறனைத் திட்டமிட்டுப் பெருக்குவதுடன், வழங்கப்படும் மின் சக்தியின் தரத்தை மேம்படுத்தவும் மின் இழப்பினைக் குறைக்கவும் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, மின் சக்தியைக் கொண்டுசெல்வ தற்கும் வழங்குவதற்கும் 1976-77-ல் 14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் இத்தொகை இருமடங்காக, அதாவது 28·5 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

### தொழில்கள்

17. நூற்று இருபத்தேழு கோடி ரூபாய் முதலீட்டுடன் சேலம் உருக்காலையின் முதல் நிலைப் பணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டத்தை விரைந்து செயற்படுத்தப் போதுமான நிதி ஒதுக்கம் தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென நாம் இந்திய அரசிடம் எடுத்துக் கூறியுள்ளோம்.

18. மாநில அரசின் ஆண்டுத் திட்டத்திலுள்ள பல்வேறு தொழிற் திட்டங்களுக்கும் வேலைத் திட்டங் களுக்கும் 13·77 கோடி ரூபாய் அளவுக்குக் கணிசமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் அரசுத் துறை, கூட்டுத் துறைத் திட்டங்களில் 1977-78-ல் மொத்தம் 20 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும். அரியலூரில் உள்ள அரசுத் துறை சிமெண்ட் தொழிற்சாலையில் திட்டமிட்டபடி பணி நிறைவேறி வருகிறது. இது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். இதன் மொத்த முதலீடு 29 கோடி ரூபாயாகும். வேலூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், தஞ்சாவூரில் உள்ள அரசுத் துறை சர்க்கரை ஆலையும் 1976-77-ல் செயல்படத் தொடங்கின. பெரம்பலூர் சர்க்கரை ஆலை 1977 செப்டம்பர் திங்களில் கட்டி முடிக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. மற்றொரு சர்க்கரை ஆலை நிறுவ வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தோல், மின் அணுவியல், பட்டுப் புழு வளர்ப்பு ஆகிய துறைகளில் கணிசமான அளவு வாய்ப்பு உள்ளமையால், இவை தொடர்பான தொழில் திட்டங்களுக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

### கிராமங்களில் தொழில் வளர்ச்சி

19. தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகள், சிறு நகரங்கள் அனைத்திலும் தொழில்களைப் பரவலாக ஏற்படுத்தத் திட்டமிட்டு நிறைவேற்றுவதே நமது அரசின் உறுதியான கொள்கையாகும். தமிழ் நாட்டில் பதிவு பெற்ற சிறு தொழிற்கூடங்கள் 50,000 என்ற அதிக அளவில் இருந்தபோதிலும், இவற்றில் பல தொழிற்கூடங்களில் உற்பத்தி



குறைந்த அளவில் உள்ளது ; பல தொழிற்கூடங்கள் மூடியும் கிடக்கின்றன. இச்சூழ்நிலையில் தற்போதுள்ள சிறு தொழிற்சாலைகள் முழு அளவு உற்பத்தித் திறன் எய்தாமைக்கான காரணங்கள் பற்றி விரிவான ஆய்வை விரைவாக மேற்கொள்வதென முடிவு செய்துள்ளோம். இந்த ஆய்வின் அடிப்படையில், உற்பத்தி குறைந்துள்ள அல்லது செயலற்று முடங்கிக் கிடக்கும் சிறு தொழிற்கூடங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளித்து உற்பத்தி தொடங்கும் வகையில் தேவையான நிதி உதவி, தொழில் நுட்ப ஆலோசனைகள், மூலப் பொருள்கள் வழங்கல், விற்பனை ஏற்பாடுகள் ஆகியவைகளுக்கு உதவி அளிக்கப்படும்.

20. நவீன சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், வாணிபம், ஏனைய பணி நடவடிக்கைகள் ஆகியவற்றில் இயன்ற அளவு சொந்தமாகத் தொழில் தொடங்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதன் மூலம் மட்டுமே, வேலையில்லாப் பிரச்சினைக்கு, குறிப்பாகப் படித்து வேலையற்றிருப்போரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். கடந்த ஆண்டில் புதிதாக 4,000 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அடுத்த 12 மாதங்களில் 10,000 சிறு தொழில்கள் தொடங்கப்பட வேண்டுமென்பதை நாம் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டுள்ளோம். இவை ஏறக்குறைய 50,000 பேர்களுக்காயினும் வேலை வாய்ப்பளிக்கும். இதற்காக மாநிலத் தொழில் இயக்குநர் அலுவலகமும் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (சிட்கோ) சிறு தொழில் முனைவர்களுக்குப் பல வழிகளில் உதவி செய்யும் நல வளர்ச்சி நிறுவனங்களாகச் செயற்படும். அதே நேரத்தில், செருப்பு தைப்போர், தையற்கலையில் ஈடுபடுவோர், சலவைத் தொழிலாளர், பொற்கொல்லர், கருமார், தச்சர், நீர்க் குழாய்ப் பணியாளர், பழுது பார்ப்போர் இது போன்ற தொழில்களில் ஈடுபட்டிருப்போருக்கு சுய வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க ஊக்கமும் உதவியும் அளிக்கப்படும். வங்கிகளில் நிதி உதவி பெற்று, இத்திட்டத்தின் மூலம் அடுத்து வரும் 12 மாதங்களில் குறைந்தது இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த முற்படுவோம்.

21. கிராமப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் பொறுப்பை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இந்தப் பணியில் ஆண் துணையற்ற மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு வீட்டுத் தொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் ஏற்படும் வேலை வாய்ப்பு கிராமக் குடும்பங்களுக்கு வருவாயை அதிகரிப்பதுடன், சமூக அமைப்பின் குறைபாடுகளிலிருந்து மகளிர் விடுபடவும் உதவும். வீட்டுத் தொழில்களை விரிவுபடுத்தத் திட்டமிடும்போது, உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்குரிய வசதி குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இத் தொழிற் கூடங்களில் நம் மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள மக்களின் தேவைகளுக்கேற்ப உற்பத்தி முறைகளை அமைக்க வேண்டும். இவை குறித்து அரசுக்கு ஆலோசனை நல்கவும், திட்டங்களைச் சிறப்பாகவும் விரைவாகவும் வகுக்க வழிவகை கூறவும் நிபுணர் குழு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம்.

### கைத்தறி வளர்ச்சி

22. கைத்தறி வளர்ச்சிக்கு நாம் தலையாய முக்கியத்துவம் அளிக்கிறோம். கைத்தறி, தமிழ் நாட்டின் பொருளாதாரத்திற்கும் இதனை நம்பி வாழ்கின்ற 20 இலட்சம் மக்களுக்கும் உறுதுணையான தொழிலாகும். கைத்தறித் துறைக்கான வசதிகள் தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அளிக்கப்பட்டு வருகின்றன ; நடப்பாண்டில் மேலும் 30,000 நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம். இந்த வசதிகள் நெசவாளர்களுக்குக்



கிட்டுவதில் இருக்கும் குறைபாடுகளை நீக்க இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். கைத்தறித் துணியைக் கொள்முதல் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தேவையான நிதி உதவியை அளிக்க அரசு முன்வரும். சேலைகள், வேட்டிகள் வடிவிலான கட்டுப்பாட்டுத் துணி உற்பத்தி செய்யும் பணியைக் கைத்தறித் துறையிடம் ஒப்படைப்பதென இந்திய அரசு முடிவு செய்துள்ளதை நாம் வரவேற்கிறோம். இதனால் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 25,000 நெசவாளர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கிடைக்கும். நடப்பாண்டில், சேலம், மதுரை, குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்படும். நுகர்வோரின் மாறிவரும் விருப்பங்களுக்கேற்ப, கவரும் வகைகளில் கைத்தறித் துணிகளைத் தயாரிக்கும் பொருட்டு, சென்னையிலும் மதுரையிலும் வடிவமைப்பு நிலையங்கள் (Design Centres) அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கைத்தறித் துணி விற்பனை வாய்ப்பினை மேம்படுத்தும் பொருட்டு, கூட்டுறவுத் துறையில், இரண்டு இலட்சம் கைத்தறிகள் பயன்படும் வகையில், விரிவான உற்பத்தித் திட்டம் ஒன்றை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

### சமூக நலப் பணிகள்

23. சமுதாயத்தில் வறிய, நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார வாய்ப்புகளையும் மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படும் திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளிப்பது இப் புதிய அரசின் கொள்கையாகும். அனைத்து மக்களுக்கும் வேலை வாய்ப்புகளையும் வருவாயையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொதுவான வளர்ச்சித் திட்டங்களுடன், அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர், மீனவர், கைத்தறி நெசவாளர், ஆதரவற்ற விதவைகள் போன்றவர்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வரும் துன்பங்களைக் களைய நாம் நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில், கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், கல்வி, சுகாதார வசதிகள், வீட்டு வசதி, சாலைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவை கால வரம்புக்குட்பட்ட திட்டவட்டமான பணிகள் மூலமாக அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இது இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நாம் அவசிய அவசர உணர்வோடு கடைப்பிடிக்க முற்பட்டுள்ள கொள்கையாகும்; வருங்காலத்திலும் நாம் நிறைவேற்றும் கிராமப்புற, பின்தங்கியோர் வளர்ச்சி-நல நடவடிக்கைகளில் இக்கொள்கையைப் பின்பற்றுவோம்.

### கிராமக் குடிநீர் வழங்கல்

24. நல்ல குடிநீர் போதிய அளவில் கிடைப்பது மக்களின் இன்றியமையாத் தேவையாகும். தமிழ் நாட்டில் கிராமப் பகுதிகளில் 55,000 குடியிருப்புகளில்


குடிநீர் வசதி அளிப்பதற்கு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புகளில் 38,450 குடியிருப்புகளில் மட்டுமே தற்சமயம் நல்ல குடிநீர் போதிய அளவு கிடைக்கும் வசதிகள் உள்ளன என இந்த ஆய்வு புலப்படுத்தியுள்ளது. எஞ்சிய 16,550 குடியிருப்புகளில் 17 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 4,010 குடியிருப்புகளில் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் குடிப்பதற்கேற்ற நீர் நிலையே இல்லை. இக் குடியிருப்புகளுக்கு உயரிய முன்னுரிமை அளித்துக் குடிநீர் வழங்க ஏறக்குறைய 14 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. முதற் கட்டமாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென முடிவு செய்து நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 6.65 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இதற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் மேலும் 3 முதல் 4 கோடி ரூபாய் கிடைக்குமென நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த 12 மாதங்களுக்குள் இக் குடியிருப்புப் பகுதிகளுக்குப் போதிய அளவில் குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும். நடப்பாண்டு இறுதிக்குள்ளேயே இவற்றில் பெரும்பாலான குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும். அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்கு இத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

### அரிசனங்கள்—பழங்குடியினர் நலன்

25. அரிசனங்கள், பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 23·57 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசனங்கள், பழங்குடியினர் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள் அளிப்பது குறித்து நாம் முக்கியமான முடிவுகள் சிலவற்றை எடுத்துள்ளோம். இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அரிசன, பழங்குடி மாணவர்களுக்கு அவர்கள் பள்ளி இறுதி வகுப்பு பயிலும் வரை (அவர்களுடைய பெற்றோர் வருவாய் எவ்வளவாயிருந்தாலும்) இலவசமாகப் புத்தகங்கள் வழங்குவதென்றும் சிறப்புக் கட்டணங்களையும், தேர்வுக் கட்டணங்களையும் இலவசமாக்குவதென்றும் முடிவு செய்துள்ளோம். மேலும், கல்லூரிப் படிப்பு நிலையில் அரிசன, பழங்குடி மாணவர்கள் அனைவருக்கும் (அவர்களுடைய பெற்றோர் வருவாய் எவ்வளவாயிருந்த போதிலும்) படிப்புக் கட்டணமின்றிப் பயில வசதியளிப்பதென நாம் முடிவு செய்துள்ளோம். இந்த முடிவுகளின் விளைவாக, அரிசன, பழங்குடி மாணவர்கள் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி பயில்வர். பள்ளி இறுதி வகுப்பு நிலை வரை முற்றிலும் இலவசக் கல்வி பெறுவதுடன், இலவசமாகப் புத்தகங்களும் பெறுவர். இத் திட்டத்திற்காகக் கூடுதலாக 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

26. தமிழ்நாட்டின் பழங்குடி மக்களின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகளைக் கணிசமாக உயர்த்தியுள்ளோம். 1976-77-ல் பழங்குடி மக்கள் துணைத்திட்டத்திற்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் இது 153 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.





## மகளிர் நலன்

27. வறுமையில் வாடும் விதவைகளுக்கும் பிற மகளிருக்கும் உதவ புதிய திட்டங்கள் சிலவற்றைக் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய்க்குக் குறைவான வருவாய் உள்ள, 16 முதல் 30 வயதுள்ள, 1,000 ஏழை மகளிர் சுருக்கெழுத்து, தட்டச்சு வடிவில் தொழிற்பயிற்சி பெற அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 150 உதவித்தொகை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,000-க்குக் குறைவான வருவாய் உடைய கைம்பெண்களின் சிறார்களுக்குப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக அளிக்கப்படும். ஆயுள் ஈட்டுறுதித் தொகை, வருங்கால வைப்புத் தொகை போன்ற பயன்களைப் பெற கைம்பெண்களுக்கு உதவவும், கல்வி வசதிகள் குறித்தும் வேலை வாய்ப்புகள் குறித்தும் அவர்களுக்கு ஆலோசனை அளிக்கவும், அவர்களுடைய சிறார்களை அனாதை இல்லங்கள், கல்விக்கூடங்கள் முதலியவற்றில் சேர்ப்பது குறித்து வழி காட்டவும் மாநிலம் முழுவதிலும்



ஆங்காங்கே இதற்கான ஆலோசனை கூற உதவி நிலையங்களை அமைக்க இருக்கிறோம்.

## மீனவர் நலன்

28. மீனவர்கள், அவர்தம் குடும்பத்தினர் ஆகியோரின் நலனுக்காகச் சிறப்பு நல நிதி ஒன்று தொடங்கப்படும். கடலில் சென்று இயற்கையின் தாக்குதலால் அகால மரணமடையும் மீனவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக 5,000 ரூபாய் மானியம் அளிக்கப்படும். இதில் 2,000 ரூபாய் ரொக்கமாகவும் எஞ்சிய தொகை தகுந்த தவணைகளிலும் கொடுக்கப்படும். அவ்வாறு கடலில் உயிரிழக்கும் மீனவர்களின் குடும்பங்கள் தனித்துத் தொழில் நடத்தும் வகையில் மீனவரின் கைம்பெண்கள், சிறார்கள் ஆகியோரின் புது வாழ்வுக்காக மேற்கொண்டும் 5,000 ரூபாய் செலவிடப்படும். இது மீனவர் நலனுக்கான நிலையானதொரு திட்டமாகும். இப்புதிய நிதிக்கு, அரசு ஆண்டுதோறும் 2 இலட்சம் ரூபாய் அளிக்கவும் முதலமைச்சர் பொதுத் துயர்தணிப்பு நிதியிலிருந்து அதே அளவுத் தொகையை அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

29. தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர்களின் நலனுக்காகப் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசின் அழைப்பின் மேல் சென்னைக்கு வரும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் குறைந்த செலவில் வசதியான தங்குமிடம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு மேற்கூறிய வாரியத்திற்கு அரசு உதவியளிக்கும்.

### கிராம வீட்டு வசதி

30. கிராமப் புறங்களில் வீட்டு வசதிகளை அதிகரிக்க இதுவரை போதுமான அளவு கவனம் செலுத்தப்படவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராம வீட்டு வசதிக்காக ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வழங்கும். நடப்பாண்டில் 50 கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படும். அடிப்படைத் தேவையாகிய வீட்டு வசதியை அரிசனங்களும் பழங்குடி மக்களும் அடையும் பொருட்டு, வீடுகள் கட்டிக்கொள்வதற்காக, அவர்களுக்கு வட்டியின்றிக் கடன் அளிக்கப்படும். கடன் மீதான வட்டித்தொகை முழுவதையும் அரசு உதவித் தொகையாக அளிக்கும். அரிசன, மீனவர் வீட்டு வசதித் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் எஞ்சிய ஏழு மாதங்களுக்கு 3.2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.


### கிராமச் சாலைகள்

31. பேருந்து வழித்தடங்களுடனும் ஏனைய முக்கிய சாலைகளுடனும் இணைக்கும் சாலைகள் சிறு கிராமங்களின் முக்கியமான தேவையாகும். இதன் பொருட்டு நாம் நடப்பாண்டில் செய்திருந்த ஒதுக்கீட்டை 60 இலட்சம் ரூபாய் அதிகப்படுத்தியுள்ளோம். கிராமப் பகுதிகளில் அணுகு சாலைகள் அமைக்க நடப்பாண்டு மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். இந்த ஒதுக்கீட்டிலிருந்து நியாயமான பங்கினைத் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கிக் கொடுக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்துவோம்.

கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதும் பொருத்தமான இடங்களில் சிறு பேருந்துகளைப் (Mini Bus) பயன்படுத்தி, அவற்றைப் பெருக்குவதும் எங்கள் கொள்கையாகும்.

### கிராம மருத்துவச் சுகாதார வசதிகள்

32. மருத்துவச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் கிராமங்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளன என்றே சொல்லவேண்டும். இக்குறையை நீக்கும் பணியை நாம் உடனடியாகத் தொடங்க வேண்டும். கிராமங்களில் மருத்துவ வசதிகளை அளிக்க நாம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இத் திட்டம் நடப்பாண்டில் நம் மாநிலத்தில் 24 வளர்ச்சி வட்டாரங்களில் தொடங்கப் பெறும். நடமாடும் மருத்துவப் பிரிவுகள் இரண்டு,



ஒவ்வொரு வட்டாரத்திலும் வாரம் ஒரு முறையாவது ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று மருத்துவ வசதி அளிக்கும். இம் மருத்துவப் பிரிவுகள் அவசியமான மருந்துகளையும் மக்களுக்கு வழங்கும். இப் பிரிவுகளுக்கு உதவி செய்யும் வகையில், ஏறத்தாழ 3,000 மக்கள் தொகைக்கு ஒருவரென ஆங்காங்கே துணை மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, பணி புரிவர்.

33. மேற்கூறிய திட்டத்துடன் கூட, 5,000 மக்கள் தொகை கொண்ட இடங்களில் சிறு சுகாதார மருத்துவ நிலையங்களை (Mini Health Centres) நடத்த, தகுதி வாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்க நாம் முன்வந்துள்ளோம். இத்தகைய சுகாதார நிலையங்களை நடத்த 54 தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இவற்றுக்காகும் தொடர் செலவில் 50 சதவீதத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் அரசு அவர்களுக்கு ஆதரவளிக்கும்.

34. நிதி நிலை சீராக இராத ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் மருந்தகங்களைச் சரிவர நடத்த இயலவில்லை. எனவே, நிதி நிலை சீராக இராத V, VI நிலை ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள இருபது மருந்தகங்களை அரசு மேற்கொள்ள வகைசெய்துள்ளோம்.

35. பள்ளிச் சிறார்கள் மருத்துவப் பரிசீலனைத் திட்டம் என்பது முக்கியமான மற்றொரு புதிய திட்டமாகும். குறிப்பாக, செங்கற்பட்டு, தருமபுரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் அதிக அளவில் உள்ள தொழுநோயைத் தடுப்பது இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ் இப்பகுதிகளில் உள்ள 11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் செவ்வையாகப் பரிசீலிக்கப்பட்டு, தொழுநோய் அல்லது பிற நோய்கள் பீடித்திருப்பின், அவற்றைத் தொடக்க நிலையிலேயே கண்டுபிடித்துக் குணப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தின்கீழ் 45 இலட்சம் சிறார்கள் பயன் பெறுவர்.

### கல்வி


36. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்த விரிவான ஆய்வின் அடிப்படையில், உயர் இடைநிலைக் கல்வி நிலையில் தொழில் சார்ந்த படிப்பை இணைப்பதைக் கொள்கையாக நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த அடிப்படை நோக்குடன், 10+2+3 கல்வி முறைத் திட்டம் தமிழ் நாட்டில் செயற்படுத்தப்படும். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில், மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் பல்வேறு நிலைகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு, 1,100 புதிய ஆசிரியர்களை நியமிக்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்துள்ள ஊதிய வீதங்களை, பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிப்பதென்ற முடிவை நாம் செயல்படுத்துவோம். அரசுக் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ள ஊதிய வீதங்களின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட சம்பள வீதங்களை வழங்குவதெனவும் முடிவு செய்துள்ளோம். இந்த முடிவுகள் 1—4—1976 முதற்கொண்டு செயலுக்கு வரும்; நிதிப் பயன் 1—1—1977 முதல் கிடைக்கும்.

37. நாடு தழுவிய எழுத்தறிவு இயக்கத்தைச் செயற்படுத்துவதற்குச் சிறப்பிடம் அளிக்கப்படும். இத்திட்டமும் பள்ளிக்கு வெளியே கல்வி புகட்டும் திட்டமும் எழுத்தறிவைப் பரவலாக்கி, பள்ளிக் கல்வியில் ஏற்படும் கால விரயம், தேக்கம் ஆகியவற்றால் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் பெருமளவில் உதவும்.

38. விளையாட்டுகளிலும் உடற்பயிற்சியிலும் தனி நாட்டம் செலுத்துமாறு கல்விக்கூடங்கள் அனைத்திலும் உள்ள மாணவர்களை ஊக்கப்படுத்த நாங்கள் ஆவலாக இருக்கிறோம். தமிழ்நாடு விளையாட்டு நிறுவனத்திற்கு 16 இலட்சம் ரூபாயும் மாணவர் உடற்பயிற்சிக்கூடங்களை நிறுவுவதற்காக புதியதொரு திட்டத்தைச் செயற்படுத்தக் கல்விக்கூடங்களுக்கு 3 இலட்சம் ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்குவோம். கல்லூரி மாணவர்களுக்காக உணவு அறை, உள் விளையாட்டு அரங்கங்கள், சைக்கிள் நிறுத்துமிடங்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் புதியதொரு திட்டத்திற்கு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்க முடிவு செய்துள்ளோம்.

## தமிழ் வளர்ச்சி

39. தமிழ் இலக்கியம், கலை ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாப்பதும், வரலாறு, தொல்பொருள் ஆராய்ச்சிக்கு ஊக்கமளிப்பதும் அரசின் கொள்கையாக இருக்கும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக இப்போது வகுக்கப்பட்டுள்ள பணித் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டம் வகை செய்யும். தமிழில் பகுதி நேர பட்டயப் படிப்புமுறையைக் (Part-time Diploma Course) கொண்டு வருவதற்குப் பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் நாம் உதவி செய்வோம். மாதந்தோறும் 75 ரூபாய் என்ற அளவில் ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படும். இந்த உதவியைப் பெற முன்வருவோரின் எண்ணிக்கையையொட்டி, இதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்படும். திருமலை நாயக்கன் மகால், இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாஸ், தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டை முதலிய முக்கியமான வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் இந்த இடங்களில் பொருட்காட்சிகளை நிலையாக அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரிய ஓலைச்சுவடிகளையும் கவனிப்பாரற்று ஆங்காங்கே கிடக்கும் சிற்பங்களையும் சேகரித்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் நான்கு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். பிற மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழிலும், தமிழிலுள்ள அரிய நூல்களைப் பிற மொழிகளிலும், மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக நிபுணர் குழு ஒன்றையும் நாம் நிறுவவிருக்கிறோம்.



## நகர்ப்புற வளர்ச்சி

40. கிராமப்புற மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்வதைத் தடுக்கும் வகையில் கிராமங்களையும் சிறு நகரங்களையும் வளர்ச்சியுறச் செய்வதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்கையில், நகர்ப்பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. வளர்ந்து வரும் நகர்ப்புறங்களில் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள, இன்றியமையாத் தேவைகளாகிய, குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வசதிகள், சாலைகள், போக்குவரத்து, வீட்டு வசதி, குடிசை மாற்றம், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில், நாம், உலக வங்கியின் உதவியுடன், சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சிப் பெருந்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளோம். இத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 6·95 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னர் குடிசையில் வாழ்ந்தவர்களுக்காகக் குடியிருப்புகள் கட்ட 3·6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் குடிநீர், துப்புரவு, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை அளிக்கும் 5 கோடி ரூபாய் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம். சென்னை மாநகராட்சி, 20 நகராட்சிகள், 70 பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு-கழிவுநீர் அகற்று திட்டங்களைச் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் 12·09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கோயம்புத்தூரில் சிறுவாணி குடிநீர் திட்டத்திற்கான 2·5 கோடி ரூபாய், திருச்சியிலும் ஏனைய நகராட்சிகளிலும் குடிநீர் வழங்கல், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவொற்றியூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகியவற்றில் கழிவுநீர் அகற்று திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான நிதி அடங்கும்.

## அரசுப் பரிசுச் சீட்டு

41. நம் முன்னாள் முதலமைச்சர் அமரர் அண்ணா அவர்கள் 1968—69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கையில் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தைத் தொடங்கியபோது அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கியதைப்



போல, மாநிலப் பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கும் தொகை மக்கள் நலத் திட்டங்களுக்காகச் செலவிடப்படுவதனால், இத்திட்டத்தைச் சூதாட்டத் தன்மை கொண்டதாகக் கருதாமல், ஏழை எளியவர்களின் நலனுக்கு உதவும் ஒரு வாய்ப்பாகக் கருத வேண்டும். இக்கருத்தை "விழுந்தால் வீட்டுக்கு; விழாவிட்டால் நாட்டுக்கு" என்று அவருக்கேயுரிய

தனித் தன்மையில் அவர் விளக்கினர். பரிசுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் மக்கள் விரும்பும் வகையிலும் சில மாற்றங்களோடு இத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென முடிவு செய்துள்ளோம். இத் திட்டத்திலிருந்து கிடைக்கும் நிகரத் தொகை கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கு வசதிகளைப் பெருக்க ஒதுக்கப்படும்.

### வேலை வாய்ப்பு

**42.** எல்லாத் திட்டங்களிலும் திட்டப் பணி களிலும் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதே நமது தலையாய நோக்கமாகும். வேலையில்லாப் பிரச்சினை அனைத்திந்திய பிரச்சினை என்றாலும், மற்ற மாநிலங் களுடன் ஒப்பு நோக்குமிடத்து, படித்தவர்களும் பயிற்சி பெறுதவர்களும் வேலையில்லாமலும், போதிய வேலை யில்லாமலும் இருப்பது தமிழகத்தில் அதிகமாகவே உள்ளது வருந்தத்தக்கது. கிராமப்பகுதிகளில், குறிப்பாக வேளாண்மை நடைபெறுத காலங்களில், வேலை வாய்ப்பைப் பெருக்க வேண்டியது அவசியம். இந்த முறையில்தான் கிராம மக்களுக்கு வெவ்வேறு மாதங்களில் ஏற்றத்தாழ்வற்ற நிலையான வருவாய் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்த முடியும். நடுத்தர, சிறு பாசனத் திட்டங்கள், கிராமச் சாலைகள், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு முதலிய பணித் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் கணிச மான நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. இத் தகைய திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் 51·70 கோடி ரூபாயாகும். இத் திட்டங்களைக் கோடைக் காலத்தில் வேலை வாய்ப்புகளைப் பெரு மளவில் பெருக்கும் முறையில் உரிய காலத்தில் செயல் படுத்த வேண்டியது அவசியமாகும். இதன் பொருட்டு, நிலப் படை (Land army) போன்ற பொருத்தமானதோர் அமைப்பை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். இந்த அமைப்பு, கிராமப் புறங்களில் செயல்திறன் கொண்ட இளைஞர் மற்றும் ஏனையோரின் மனித சக்தியைப் பயன்படுத்தி, கிராம மக்களின் நன்மைக்காக நிலையான வசதிகளை உருவாக்கவும் பராமரிக்கவும் செயல்படும். இந்த அடிப்படையில், கோடை மாதங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் பெருக்கும் திட்டத்தைச் செயற்படுத்த இயலும் வகையில் பரிந்துரைகள் செய்ய, தலைமைச் செயலாளரின் கீழ் அதிகாரிகள் குழு ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளோம். தொழில் துறை பற்றிக் குறிப்பிடுகையில் விவரித்துள்ள திட்டங்கள், சொந்தமாகத் தொழில் நடத்துவோருக்கும் இளம் தொழில் முனைவருக்கும் வேலை வாய்ப்பு களைப் பெருமளவில் ஏற்படுத்திக் கொடுக்கும்; 10+2+3 கல்வி முறையுடன் இணைந்துள்ள கல்விச் சீர்திருத்தம் தொழில் கல்விக்கான வாய்ப்புகளைக் கணிசமாகப் பெருக்கும்; இது சிறு தொழில்கள் நிறுவுதல். சொந்தமாகத் தொழில் தொடங்குதல் குறித்த திட்டங் களுடன் இணைந்து செயல்படுத்தப்படும். தொழில் நுட்பப் பயிற்சித் திட்டங்களுக்கும் நாம் முன்னுரிமை கொடுத்துள்ளோம். தற்போதுள்ள தொழில் பயிற்சிப் பள்ளிகளில் நடப்பாண்டில் கூடுதலாக ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

### அரசு அலுவலர் நலன்

**43.** அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களின் கோரிக்கைகளை அரசு எப்போதும் நியாயவுணர்வுடனும், பரிவுணர்ச்சியுடனும் அணுகும் என இத்தருணத்தில் அவைக்கு உறுதி கூற விழைகிறேன். அரசுக்குள்ள தவிர்க்கமுடியாத நிதித் தட்டுப்பாடுகள், மாநில வளர்ச்சித் தேவைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு இக்

கோரிக்கைகளை இயன்ற அளவு பூர்த்தி செய்ய அரசு தொடர்ந்து முற்படும்.

44. நாம் மூன்றாவது ஊதியக் குழுவை விரைவில் அமைக்க இருக்கிறோம். இக்குழு கவனிக்க வேண்டிய அம்சங்கள் விரிவானவையாக இருக்கும். சம்பள வீதங்களையும் படிகளையும் சீரமைக்கவும் மேம்படுத்தவும் அரசுக்குப் பரிவுரை அளிப்பதுடன், தற்போதைய சம்பள வீதங்களிலுள்ள முரண்பாடுகளைச் சரி செய்ய இக்குழு ஆலோசனை நல்கும். மேலும், அரசு அலுவலர்கள் பெற்று வரும் மருத்துவ வசதி, வீட்டு வசதி, அவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள், சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் முதலியவற்றையும் ஆராய்ந்து தக்க பரிந்துரைகள் செய்யுமாறு ஊதியக் குழுவைக் கேட்டுக் கொள்ள முடிவு செய்துள்ளோம். இது, அலுவலர்களின் சம்பள வீதங்களையும், வாழ்க்கைத் தரத்தையும் குறித்து முழுமையாக ஒருங்கிணைந்த முறையில் அரசு கவனித்துச் செயல்பட உதவும்.

45. 1970ஆம் ஆண்டில் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றிய பின்னர், ஏழு முறை கூடுதல் அகவிலைப்படி அளிக்கப்பட்டுள்ளது. இவைகளையும், மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் அண்மையில் அறிவிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தையும் கணக்கெடுத்துப்பார்ப்பின், இவற்றின் பொருட்டு ஆண்டொன்றுக்கு 104 கோடி ரூபாய்ச் செலவை மேற்கொண்டுள்ளோம். அரசு அலுவலர், உள்ளாட்சி நிறுவன அலுவலர், ஆசிரியர்கள் ஆகியோர் மொத்தம் 7.3 இலட்சம் பேர்களில், குறைந்த ஊதியம் பெறும் 3.4 இலட்சம் பேர் இடைக்கால நிவாரணத்தையும் சேர்த்துப் பெறும் அகவிலைப்படி, மத்திய அகவிலைப்படி வீதங்களுக்குச் சமமாக தற்போது அமைந்து விட்டது. மற்றவர்களுக்கும் ஓரளவு பயன் அளிக்கும் வகையில், மாதத்திற்கு 200 ரூபாய் அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறுவோருக்கு இடைக்கால நிவாரணத்தை 10 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்துவதென இப்போது முடிவு செய்துள்ளோம். இதனால் 4·1 இலட்சம் அலுவலர் பயன் பெறுவர். இந்தச் சலுகையின் காரணமாக, ஏற்கெனவே ஜூன் மாதம் அறிவிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்திற்காகச் செலவாகும் 8.8 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டொன்றுக்கு 4.9 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இந்தக் கூடுதல் இடைக்கால நிவாரணமும் ஆகஸ்ட் முதல் தேதி அளிக்கப்படும் ஜூலை மாதச் சம்பளத்துடன் தரப்படும்.

46. அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம் முக்கியமானதொரு திட்டமாகும். நடப்பாண்டில் ஏற்கெனவே இத்திட்டத்திற்குச் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடான 150 இலட்ச ரூபாயினை 200 இலட்ச ரூபாய்க்குத் தற்போது உயர்த்தியுள்ளோம். இக் கூடுதல் ஒதுக்கீடு குறைந்த சம்பளம் பெறும் அலுவலர்களுக்கு 660 வீடுகள் கூடுதலாகக் கட்ட வகை செய்யும். காவல் துறையினருக்கு வீடு கட்டும் திட்டத்திற்காக நடப்பாண்டில் 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு அதிக அளவில் ஒதுக்கீடுகள் செய்யப்படும்.

47. 7.3 இலட்சம் அலுவலர்களுக்குப் பயன் தரும் வகையில் சிறப்பான புதிய ஓய்வு கால நன்மைத் திட்டம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின்கீழ், அலுவலர்களின் சேமிப்பாக மாதந்தோறும் 15 ரூபாய் பிடித்தம் செய்யப்படும். இப்பிடித்தங்கள் மீதான வட்டியுடன் ஒரு கூடுதல் பணிக்கொடையும் அரசால் வழங்கப்படும். இதனால், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் ஓய்வு பெறும் அலுவலர்களுக்கும் நல்ல பயன் கிட்டும். இருபத்தைந்து ஆண்டு காலப் பணிக்குப் பின் ஓய்வு பெறும் ஓர் அலுவலர், தான் 4,500 ரூபாய் மட்டும் கட்டியிருந்தபோதிலும், ஓய்வு

பெறும் போது 10,000 ரூபாய் முழுத் தொகையாகப் பெற்றுப் பயனடைவார். இத்திட்டத்தின் கீழ் வரும் தொகை அலுவலர்களுக்குப் பயன்தரும் வகையில் செலவிடப்படும். அரசு அலுவலர்கள் சொந்தமாக வீடு கட்ட அதிக அளவில் கடன் கொடுக்கவும், அவர்களுக்கு வாடகை வீடு கட்ட வீட்டு வசதி வாரியத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவும், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாகக் கடன் வசதி அளிக்கவும் இந்தத் தொகை பெரும்பாலும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின் விவரங்கள் குறித்து அலுவலர் சங்கங்களைக் கலந்து ஆலோசித்து, அதன் அடிப்படையில் இதனைக் கூடிய விரைவில் செயல்படுத்துவோம்.

### நிதி நிலைமை

48. இனி, வரவினங்கள் செலவினங்கள் பற்றி ஆராய்வோம். 1976–77 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றுக்குறையாக இருக்குமென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும் போது 2.98 கோடி ரூபாய் பற்றுக்குறையாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. திருத்த மதிப்பீடுகளின்படி வருவாய்க் கணக்கில் பற்றுக்குறை 17.28 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மொத்தத்தில் 1976–77 ஆம் ஆண்டு இறுதியில் 9.82 கோடி ரூபாய் உபரியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

49. 1977–78 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கின் கீழ் வரவுகள் 633.24 கோடி ரூபாயாகவும், செலவுகள் 663.40 கோடி ரூபாயாகவும், ஆகவே பற்றுக்குறை 30.16 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1977–78 ஆம் ஆண்டில் மூலதனச் செலவுகள் 62.88 கோடி ரூபாயாக இருக்கும். வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்து முழுமையாகப் பார்க்கும் போது, 1977–78 ஆம் ஆண்டு இறுதியில் 18.89 கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப் பற்றுக்குறை 9.9 கோடி ரூபாயாகவும், மொத்தப் பற்றுக்குறை 13.92 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. அலுவலர்களுக்கு ஜூன் மாதத்தில் அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம், சட்டசபைத் தேர்தல்கள் நடத்தியமைக்கான செலவுகள், கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி புதிய சம்பள வீதங்களை அளிப்பது, சில வருவாய் இனங்களில் வரவு குறைந்தது ஆகியவற்றால் வருவாய்ப் பற்றுக்குறை அதிகரித்துள்ளது. இருப்பினும், ஆரம்பக் கையிருப்பு காரணமாகவும் மூலதன வருவாய் ஓரளவு கூடியதன் விளைவாகவும் மொத்தப் பற்றுக்குறை நாடாளுமன்ற மதிப்பீடுகளை விட 5 கோடி ரூபாய் அளவில் மட்டுமே அதிகரித்துள்ளது.

### வரி அமைப்புகளில் மாறுதல்கள்

50. உங்கள் பொறுமையை மேலும் சோதிக்காமல், உங்களுடைய ஆவலை நிறைவு செய்யும் வண்ணம் இனி வரி அமைப்பில் செய்யவிருக்கும் மாறுதல்கள் பற்றிக் கூற முற்படுகிறேன். மக்களைப் பெரிதும் துன்புறுத்தாத வரி விதிப்பு ஏதாவது ஒன்று கிடைக்குமா என முயன்று தேடினேன். இந்த முயற்சியில் பெருமளவு வெற்றி பெற முடியவில்லை. எனினும், ஓரளவு வெற்றியை எட்டிப் பிடிக்காமலும் இருக்கவில்லை. நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் மது விலக்குக் கொள்கைக்கு ஒவ்வ, அண்டை மாநிலங்களில் நிலவும் வீதங்களுக்கு ஏற்ப, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான வகைகளின் மீதான ஆயத் தீர்வை, ப்ரூப் லிட்டர் (Proof litre) ஒன்றுக்குத் தற்போதுள்ள 14 ரூபாயி

லிருந்து 17 ரூபாய்க்கு உயர்த்தப்படும். இதனால் மது அருந்துவோருக்கு உடல் நலனும், அது இல்லாவிட்டால் பொது நலனுக்காக அரசுக்கு வருவாயாயினும் கிடைக்கும். மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் தெளிந்த சாராவி (Rectified spirit) மீதான ஆயத் தீர்வை, ஒரு முழு லிட்டருக்கு (Bulk litre) தற்போதுள்ள 50 காசிலிருந்து 80 காசாக உயர்த்தப்படும். இந்த மாறுதல்களினால், ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

51. 1976–77ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முதல், இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களில் பாசனக் கட்டணங்கள் அதிகப்படுத்தப்பட்டதையும், வணிகப் பயிர்கள் மீது தனித் தீர்வை விதிக்கப்பட்டதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 30–6–1977 அன்று முடிவுற்ற பசலி ஆண்டில் இந்த வரி வசூல் தள்ளி வைக்கப்பட்டது. தள்ளிவைக்கப்பட்ட இக் கட்டணங்கள் இனி வசூல் செய்யப்பட மாட்டாது என இப்போது தீர்மானித்துள்ளோம். மேலும், முதல் வகைப் பாசன ஆதாரங்களின் கீழ் இக் கூடுதல் பாசனக் கட்டணங்களை, ஒவ்வொரு பயிருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 12 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களின் கீழ் 10 ரூபாயிலிருந்து 8 ரூபாயாகவும் குறைப்பதென முடிவு எடுத்துள்ளோம். வணிகப் பயிர்கள் மீதான தனித் தீர்வையைப் பொறுத்த மட்டில், திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு இத் தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைக்கப்படும். குறைந்த காலப் பயிர்களான புகையிலை, மிளகாய், பாசனப் பருத்தி, பாசன நிலக்கடலை ஆகியவற்றின் மீதான தனித் தீர்வையை நிர்ணயிப்பதும் வசூலிப்பதும் விவசாயிகளுக்குத் தொல்லைகள் தரக்கூடும் என்பதால், இப் பயிர்கள் மீதான, ஏக்கருக்கு 12.5 ரூபாய் என்ற அளவிலுள்ள தீர்வையை அறவே விட்டுக் கொடுக்கவும் முடிவு செய்துள்ளோம். மேற்கூறிய கணிசமான சலுகைகளினால், ஆண்டொன்றுக்கு 2.5 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும்.

52. தமிழ் நாட்டில் தண்ணீர்த் தீர்வையைப் பொறுத்த மட்டில், சிக்கலான முறை இருந்துவருகிறது. மொத்த நன்செய் தீர்வை, புதுப் பாசனத் திட்டங்களுக்கான தனித் தண்ணீர்க் கட்டணம், கூடுதல் நஞ்சைத் தீர்வை, தண்ணீர் மேல்வரிகள் என்று பல வகைக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. பல ஆண்டுக் காலங்களில் உருவான இந்த அமைப்பைத் தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி, சீர்படுத்த வேண்டியுள்ளது. மற்ற மாநிலங்களில் விதிக்கப்பட்டு வரும் கட்டண வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தும், மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வகையிலும், விவசாயிகளின் கொடுக்கும் திறனுக்கு ஏற்பவும், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கமளிக்கும் முறையிலும், தண்ணீர் தீர்வை அமைப்பில் மாறுதல்கள் செய்ய வேண்டும். அதே நேரத்தில், பாசனத்தால் பயன் பெறுவோர் பயனுக்கேற்ற கட்டணத்தைக் கொடுப்பதும் அவசியம்; பாசன ஆதாரங்களை விரிவுபடுத்தவும், சீரான முறையில் பராமரிக்கவும் அரசுக்கு நிதியும் கிடைக்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில், பாசனத் தீர்வைகள், பாசனம் சம்பந்தப்பட்ட தீர்வைகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தித் தக்க மாறுதல்களைப் பரிந்துரைக்கக் குழு ஒன்றை அமைக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

53. விற்பனை வரியைப் பொறுத்தமட்டில், வாங்குவோரிடமிருந்தும், விற்போரிடமிருந்தும் வந்துள்ள

முறையீடுகளின் அடிப்படையிலும், வரி ஏய்ப்பு, வரி கொடாமை ஆகியவற்றை நீக்கும் வண்ணமும் விற்பனை வரியில் பல மாறுதல்களைச் செய்ய முடிவு செய்துள்ளோம். இந்தப் பின்னணியில், கால்நடை, பசும்புல், பன் (Bun), பொரை, தயிர், வெண்ணெய், கதர் கிராமத் தொழில் குழுவினாலோ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினாலோ அல்லது இவைகளின் உதவியுடனோ அமைக்கப்பட்ட மின் விசைச் செக்குகளில் (Power ghanies) உற்பத்தி செய்யப்படும் எண்ணெய், எண்ணெய்ப் பொருள்கள், ஏற்கெனவே வரி செலுத்திய பொருள்களைக் கொண்ட மருந்துக் கலவைகள், கலவைப் பொடிகள், கைத்தறியிலும் ஆலையிலும் நெய்த கைக்குட்டைகள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்படும். தமிழ்நாட்டின் முக்கியமான சிறு தொழில்களில் ஒன்றாகிய பின்னப்பட்ட உள்ளாடைத் தொழில் (hosiery) நடத்துவோர், மற்ற மாநிலங்களிலிருந்து தீவிர போட்டி உள்ளதாக முறையிட்டுள்ளார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, பருத்தி உள்ளாடை நூல் (Cotton hosiery yarn) மீதான மாநில விற்பனை வரியை 3 சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகவும், மத்திய விற்பனை வரியை 2½ சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகவும் குறைப்பதென முடிவு எடுத்துள்ளோம். பல நிலைகளில் வரியைத் தவிர்ப்பதற்காக, பருத்தித் தையல் நூலின் மீதுள்ள பல முனை வரியை நீக்கி, 3 சத வீத ஒரு முனை வரி விதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பினைத் தடுக்கும் வண்ணம், பட்டை தீட்டப்படாத செயற்கை வைரக் கற்களின் மீது 15 சத வீத ஒரு முனை வரி விதிக்கப்படும். பட்டை தீட்டப்பட்ட செயற்கை வைரக் கற்களுக்குத் தற்போது உள்ள வரி விலக்கு தொடர்ந்து அளிக்கப்படும். இதே போன்று, வெல்லம், வெல்லத்தூள், உருண்டை வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றின் மீதும் பல முனை வரி விதிக்கப்படும். உலோகத்திற்கு மெருகு ஏற்றப் பயன்படும் சோப்பிற்கு, பாலிஷுக்கு (Polish) விதிப்பது போல 8 சதவீத ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்படும். வாசனைத் திரவியங்கள், பவுடர், ஸ்னோ, தலைக்குத் தடவும் வாசனைத் தைலம் ஆகியவற்றை, சாதாரண உபயோகத்திற்கு எனவும், ஆடம்பர உபயோகத்திற்கு எனவும் இரு வகையாகப் பிரித்து, சாதாரண வகையின் மீது 8 சதவீத ஒருமுனை வரியும் ஆடம்பர வகையின் மீது 12 சதவீத ஒரு முனை வரியும் விதிக்கப்படும். இவ்வாறு மணம் கமழுமிடத்தில் பணம் திரட்டும் வாய்ப்பைப் பெற்றதற்காக அவையின் ஒப்புதலைப் பெறுவேன் என நம்புகிறேன். அலுமினியத்தின் பல்வேறு வடிவங்களின் மீது விதிக்கப்படும் வரியைத் தவிர்க்கத் தேவையான மாறுதல்கள் செய்யப்படும். எண்ணெய் ஆலை உரிமையாளர்களின் வரி ஏய்ப்பைத் தடுக்க, நாட்டுச் செக்கெண்ணெயும் நாட்டுச் செக்குப் பிண்ணாக்கும் பல முனை வரி விதிப்பின் கீழ் கொண்டுவரப்படும். தற்போது உள்ளது போலவே உண்மையாக நாட்டுச் செக்கெண்ணெய், எண்ணெய்ப் பொருள்கள் உற்பத்தி செய்வோருக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்கு தொடரும். காகிதத்தின் தரம் மாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுங்கால், ஏற்கெனவே வரி கொடுக்கப்பட்டிருந்தால், மறு முறையும் வரி விதிப்பு எழா வண்ணம் தக்க மாறுதல் செய்யப்படும். சாயங்கள், இரசாயனப் பொருட்கள், எஸ்ஸென்சுகள், பழப் பானங்கள் ஆகியவற்றின் மீது இப்போதுள்ள பல முனை வரிக்கு மாறாக ஒரு முனை வரி விதிக்கப்படும். மேற்கூறப்பட்ட மாறுதல்கள் அனைத்தும் தேவையான அறிவிப்புகளின் மூலமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். இந்த அறிவிப்புகள் கொண்ட சட்ட மாறுதல்கள் அவையின் முன் கொண்டுவரப்படும்போது, அவற்றைப் பற்றி விரிவாக விவாதிக்க உறுப்பினர்களுக்கு வாய்ப்புகள் கிட்டும்.




54. வணிகர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கவும், வரி வசூலைப் பெருக்கவும், அதே நேரத்தில் லஞ்ச ஊழலை ஒழிக்கவும் விற்பனை வரி வழிமுறைகளில் சில மாறுதல்கள் செய்ய முடிவு எடுத்துள்ளோம். ஆண்டிற்கு ஒரு இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டுவரப்படும். கடந்த காலத்தில் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு முரண்பாடாக உள்ள கணக்குகளும், ஆய்வின்போது ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வணிகர்களின் கணக்குகளும் மட்டுமே விரிவாக ஆய்வு செய்யப்படும். இந்த மாற்றத்தினால், நேர்மையான சிறு வணிகர்களுக்குத் தொல்லைகள் குறைவதுடன், பெரும் புள்ளிகளின் மீது மதிப்பீட்டதிகாரிகள் தனிக் கவனம் செலுத்தவும் இயலும். சோதனைச் சாவடிகளில் வழிமுறைகளை எளிதாக்கவும், சோதனைச்சாவடி அதிகாரிகளின் ஆணை சம்பந்தப்பட்ட குறைகளை விரைந்து கவனிக்கவும், வேறு சில முடிவுகளையும் எடுத்துள்ளோம். தாமதமாகச் செலுத்தப்படும் வரியின் மீதான அபராதத் தொகையை அதிகரிக்கவும் உத்தேசித்துள்ளோம். வருமான வரி ஏய்ப்பவர்களுக்கு இருப்பதைப் போன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு, விற்பனை வரி தொடர்ந்து கொடாதவர்களின் பெயர்களைச் செய்தித்தாள்களில் வெளியிட வழி செய்யப்படும். வணிக வரித் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் வரி கொடுப்போரின் சார்பில் வழக்காடுவதை அனுமதிக்கும் விதி முறைகளைக் கடினமாக்கிச் சீரமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

55. விற்பனை வரிச் சட்டம், விதிமுறைகள் இவற்றின் கீழ் எழும், வரிமதிப்பீடு, வசூல், முறையீடுகள் சம்பந்தப்பட்ட வழி முறைகளை முழுமையாகவும் விரிவாகவும் ஆராய நிபுணர் குழு ஒன்று அமைக்கத் திட்ட மிட்டுள்ளோம். வணிகருடைய அல்லல்களைக் குறைப்பதும், வசூலை அதிகரிப்பதும், லஞ்சத்தை ஒழிப்பதுமான மூன்று முக்கிய குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதே இக்குழுவின் நோக்கமாக இருக்கும்.

56. தமிழ்நாட்டில், கேளிக்கை வரிகளின் சுமை, குறிப்பாகக் கீழ் வகுப்பு நுழைவுக் கட்டணங்களில் அதிக அளவில் இருப்பதாக முறையிடப்பட்டு வந்துள்ளது. இந்த நீண்டகால முறையீட்டைக் கருத்தில் கொண்டு, அரசு குறைந்த கட்டணங்களுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் பின்வரும் முடிவுகள் எடுத்துள்ளது. நிகர நுழைவுக் கட்டணம், கேளிக்கை வரி, மேல் வரி ஆகியவை சேர்ந்து 25 காசுகளுக்கு அதிகமாக இல்லாத கட்டணங்களுக்கு, தற்போது 15 காசுகளாக இருந்து வரும் கூடுதல் மேல்வரி 5 காசுகளாக இனி குறைக்கப்படும். இவ்வாறே நிகர நுழைவுக் கட்டணம், கேளிக்கை வரி, மேல்வரி ஆகியவை 26 காசுகள் முதல் ஒரு ரூபாய் வரை இருக்கும் கட்டணங்களுக்குக் கூடுதல் மேல்வரி தற்போது 15 காசுகளாக இருப்பது, 10 காசுகளாக இனி குறைக்கப்படும். இந்த வரிக் குறைப்பின் பயன் திரைப்படங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு முழுமையாகக் கிட்டும். இதன்

காரணமாக, முதற் கட்டத்தில் ஏற்படும் வரி இழப்பு, வரிக் குறைப்பின் விளைவாக, பொது மக்கள் திரைப் படங்களுக்குக் கூடுதலாகச் செல்வதனால், காலப் போக்கில் ஓரளவுக்கு ஈடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

57. திரைப்படங்களைப் பார்ப்போர் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், படங்களின் தரமும் உயரவேண்டும். இந்தக் கருத்தின் அடிப்படையில், குறைந்த செலவில், சமுதாய முற்போக்கு இலட்சிய அடிப்படையில், உயர்ந்த தரமுள்ள சமூகப் படங்கள் தமிழில் எடுப்பதை ஊக்குவிக்கத் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், தகுதி பெறுகின்ற திரைப் படங்களுக்கு, ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கைக்கு உட்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் உதவி மானியமாக வழங்கப்படும்.




58. விற்பனை வரியிலும், கேளிக்கை வரியிலும் செய்யப்படும் மாறுதல்களின் விளைவாக ஆண்டுதோறும் 40 இலட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

59. 1977–78ஆம் ஆண்டு இறுதியில் மொத்தப் பற்றுக்குறை 18.89 கோடி ரூபாயாக இருக்குமென நான் முன்பே குறிப்பிட்டிருந்தேன். வரியமைப்பில் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு மாறுதல்களின் விளைவாகவும், அலுவலர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள இடைக்கால நிவாரணத்தின் விளைவாகவும், இந்தப் பற்றுக்குறை மேலும் 5.7 கோடி ரூபாய் அதிகரிக்கும். செலவுகளில் சிக்கனம், நடைமுறையிலிருக்கும் வரிகளை நல்ல முறையில் வசூலித்தல், அரசு நிறுவனங்களைச் சீரான முறையில் நிர்வகித்தல் ஆகியவற்றின் மூலமாகவே இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். எல்லா நிலைகளிலும் லஞ்ச ஊழலை அடியோடு ஒழிப்பது என்ற இந்த அரசின் கொள்கையை ஆளுநர் உரையில் உறுதிப் படுத்தியிருப்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறேன். அதே போன்று, அரசுச் செலவுகளில்—அவை திட்டச் செலவாயினும், வளர்ச்சிப்பணிச் செலவாயினும் அல்லது பிற செலவாயினும்—தேவையற்ற விரயச் செலவுகளை இனங்கண்டு அவற்றைக் குறைக்க நடவடிக்கைகள் எடுப்பதும் நமது கொள்கையாகும். வரிப்பணத்தில் ஒவ்வொரு ரூபாயும் மக்களுக்கு நேரடி நன்மைகள் பயக்க ஒழுங்காகச் சென்றடைவதை உறுதிப்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள முற்படுவோம். லஞ்ச ஊழல், வீண் விரயம் இவற்றைக் களைய தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் காரணமாக, நிதி ஒழுங்கு ஏற்பட்டு, பற்றுக்குறையை இந்த ஆண்டு பெருமளவு சமாளிக்க முடியும் என நம்புகிறேன்.

60. பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசின் கன்னி வரவு-செலவுத் திட்டத்தை அனைத்துக் கட்சி உறுப்பினரும் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர் என்று அறிவேன். நாங்கள் பதவி ஏற்று ஒரு திங்கள் கூட முடிவுறவில்லை. இக் குறுகிய காலத்தில், எஞ்சிய ஏழு மாதங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவிருக்கும் நிலைமையில் இருப்பினும், தமிழ் நாட்டின் பல்வேறு வளர்ச்சி-நலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பெரும் முயற்சியில் திடமாகவும் திண்ணமாகவும் அடியெடுத்து வைத்துள்ளோம் என்பதை நல்லெண்ணம் படைத்த உறுப்பினர் அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என நம்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீதான வரப்போகும் விவாதத்தை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாயினும் அவையின் உறுப்பினர்கள் கூறவிருக்கும் நல்ல கருத்துக்களை ஏற்று அவற்றின் அடிப்படையில் நடப்பு நிதியாண்டின் எஞ்சிய மாதங்களிலும், வரும் நிதி ஆண்டிற்காக வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும்போதும், தேவையான மாற்றங்களையும், ஒதுக்கீடுகளையும் செய்ய முற்படுவோம் என மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

61. குறுகிய காலத்தில் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து, என் பொறுப்பின் பளுவினை எளிதாக்கிய நிதித் துறைச் செயலர் திரு ச. குகன் அவர்களுக்கும், அவருடன் பணியாற்றியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

62. இத்துடன் 1977-78 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

சென்னை,
1977 ஜூலைத் திங்கள் 25ஆம் நாள்.


**கி. மனோகரன்,**
நிதி அமைச்சர்.

"வயல்களில் கதிர் குலுங்கிடின் சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும். தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும்–நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின், நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர், கொள்வன-கொடுப்பன என்பவை நேர்மையின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும் என்று இருந்திடின் அகவிலையும், பதுக்கலும் அழிந்துபடும். பொது மக்களின் வாழ்வு சீர்படும். நாட்டின் நிலை உயர்ந்திட பணியாற்றிடவே நாம் என்ற உணர்வுடன் மாணவ மணிகள் கல்விக் கூடங்களில் பயிற்சி பெற்றிடின் நாடு மேம்பாடடையும், இவை எல்லாவற்றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களில் மட்டும் செய்யப்படுகிற காரியமல்ல ஆட்சி. நாட்டு ஆட்சி, வீட்டுக்கு-வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா

[முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபின்னர் 15—3—1967-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையில்]

# படமும் செய்தியும்



மதுரை மாவட்டத்தில் உள்ள தனக்கன் குளம் கிராமத்தில், மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தை 9-7-1977 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து அவர்கள் துவக்கி வைத்தார்.



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆண்டிப்பட்டி கிராமத்தில், 19-7-1977 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், சிறுநிலக் கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மருந்து தெளிக்கும் கருவியை வழங்கினார்.



மாலத்தீவுகளின் அமைச்சர் மாண்புமிகு திரு மம்முன் அப்துல் கயூன் அவர்கள் 21-7-1977 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினுர்.

அடையாறு முனையில் உள்ள டாக்டர் முத்துலட்சுமி பூங்காவில், சென்னை மாநகரின் 100-வது பால் விற்பனை நிலையத்தை 22-7-1977 அன்று மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்தார்.








மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், 24-7-1977 அன்று, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஊரக மருத்துவ மற்றும் சமுகப் பணி மன்றத்தின் வெள்ளி விழாவைத் துவக்கி வைத்தார். அவ்விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள், 30-7-1977 அன்று, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில், கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்ததுடன், மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.







சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் ஊரக மருத்துவ மற்றும் சமூகப்பணி மன்ற வெள்ளி விழாவினைத் துவக்கிவைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், ஊரக மருத்துவச் சேவைக்கு உதவும் பேருந்தை இயக்கி வைத்தார்.





சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஊரக மருத்துவ மற்றும் சமூகப் பணி மன்றத்தினரின், நாள்தோறும் இயங்கும் போதனை மருத்துவ மனையை (Daily Clinic) அலமாதி என்ற ஊரில் 24-7-1977 அன்று மாலை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்கள், துவக்கி வைத்தார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தியக் கடற்படையைச் சார்ந்த "விக்ராந்த்" என்னும் கப்பலை 27-7-1977 அன்று பார்வையிட்டார்.
சட்டமன்றப் பேரவையின் சபாநாயகர் அவர்களும் உடன் உள்ளார்.



ஸ்ரீலங்காவின் துணை உயர் ஆணையர் திரு எஸ். கௌதமதாஸா அவர்கள் 27-7-1977 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தூதர் திரு 'டயெட் ரிச்வென்ஸ்லாப்' அவர்கள் 27-7-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.





# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு பயிர்களுக்குத் தேவை விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக் களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக் கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும்!




ஊட்டச்சத்து மிக்க காய்கறிகளைப் பெறுவதற்கு நாம் அனைவரும் வீட்டுத் தோட்டம் அமைப்பது அவசியமாகும். வீட்டுத் தோட்டம் அமைப்பது வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் நாம் செய்யும் நல்லதோர் சேவையாக இருக்கும்.

நாம் அனைவரும் அறிவுடனும் ஆற்றலுடனும், அழகுடனும் வாழவேண்டுமானால் நம் நாட்டின் வளத்தைப் பெருக்கவேண்டுமானால்-நாம் அனைவரும் நம்முடைய அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். ஏனெனில், காய்கறிகள் நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அளிப்பதுடன் நம்மைத் தாக்கவல்ல நோய்களைத் தடுக்கவல்ல காப்பு உணவாகவும் (Protective food) விளங்குகிறது. எனவேதான், அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை ஊட்டச் சத்துணவு அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள்.

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின் படி வயதுவந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் 285 கிராம் (10 அவுன்சு) காய்கறிகளை உட்கொள்ள வேண்டும் என்றும், அதில் 115 கிராம் (4 அவுன்சு) இலைவகைக் (கீரை) காய்கறிகளாகவும் (Leaf Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளாகவும் (Tuber and Root Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) விதை மற்றும் பழவகைக் காய்கறிகளாகவும் (Seeds and Fruit Vegetables) அமைந்திருக்க வேண்டும் என்றும் ஊட்டச்சத்துணவு வல்லுநர்கள் (Nutrition Experts) பரிந்துரைத்துள்ளார்கள்.

—ஆர். மாணிக்கம்.



பல்வேறு உணவியல் அறிஞர்கள் பரிந்துரைத்துள்ள உணவு அட்டவணைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தபின் திரு. பி. சி. பான்சில் என்ற திட்ட வல்லுநர், ''70 கோடி மக்களுக்கான வேளாண்மைத் திட்டம்'' என்ற நூலில், 'சமநிலை உணவு' (Balanced Diet) பெற, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 7 அவுன்சு காயகறிகளும், 2 அவுன்சு வேர் மற்றும் கிழங்குகளும் தேவை என்று திட்டவட்டமாக விளக்கியுள்ளார்.

ஆனால் தற்பொழுது நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் உட்கொள்ளும் காய்கறிகளின் சராசரி அளவு ஏறத்தாழ 3 அவுன்சு என்ற நிலையில்தான் உள்ளது. இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்கம் நடத்திய கள ஆய்வின் மூலம் 61 சதவீதக் குடும்பங்களே நாளொன்றுக்கு ஒருமுறையாவது காய்கறிகளை உண்பதாகவும், நாளொன்றுக்கு வயது வந்த ஒருவர் அவ்வாறு உண்ணும் அளவும் 2.8 அவுன்சு என்ற அளவிலேயே உள்ளது என்றும் தெரியவந்துள்ளது. மேலும், அந்த ஆய்வின் மூலம் சென்னையில் வாழும் மக்களே உயர்ந்த அளவாக-நாளொன்றுக்கு 4.8 அவுன்சு என்ற அளவில்



காய்கறிகளை உண்பதாகவும், கோயம்புத்தூரில் உள்ளவர்கள் நாளொன்றுக்கு 4.5 அவுன்சு காய்கறிகளையே உண்பதாகவும், நீலகிரியில் வாழும் மக்களே மிகக் குறைந்த அளவில்-நாளொன்றுக்கு 0.8 அவுன்சு என்ற அளவில்-காய்கறிகளை உண்பதாகவும் தெரியவந்துள்ளது.

ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் பரிந்துரைக்கும் அளவில் நாம் காய்கறிகளை உண்பதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் மூன்று; அவை:

1. காய்களில் உள்ள ஊட்டச் சத்துக்களை உணராமை.

2. காய்கறிகளின் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்டுள்ள பற்றாக் குறை.

3. அதிக விலை.

எனவே, முதலில் காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்தினை எல்லாருக்கும் உணர்த்த வேண்டியுள்ளது. அடுத்து, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கி, குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு பணிகளையும் செவ்வனே செய்தால்தான், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை, எளிய, சாமான்ய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்கள் முதல், சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் வரை எல்லாரும் ஊட்டச்சத்துணவு பரிந்துரைக்கும் அளவில் காய்கறிகளை அன்றாடம் உண்ணமுடியும்!

## காய்கறிகளை ஏன் உண்ண வேண்டும்?

(1) காய்கறிகள் புரதச்சத்து (Protein), மாவுப் பொருள்கள் (Carbo hydrates), தாது உப்புகள் (Mineral Salts), உயிர்ச் சத்துக்கள் (Vitamins) ஆகிய சத்துக்களை நமக்குக் கொடுக்கின்றன.

2. உணவில் சுவை ஏற்படுத்துகின்றன.


3. நமக்குத் தேவையான எல்லா சக்திகளையும் அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

4. நம் உடலுறுப்புகள் வலுவடையவும், நாம் ஊக்கத்துடன் பணிகளில் ஈடுபடவும் உதவுகின்றன.

5. நமக்கு வலிவை மட்டுமல்ல வனப்பையும் தருகின்றன.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

நாம் அரிசி உணவை மட்டுமே உட்கொள்பவர்களாக இருந்தால் நாள்தோறும் நம் உடலுக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தை (கால்சியம்) அரிசி உணவு கொடுப்பதில்லை. ஆனால் இலை வகைக் காய்கறிகள் (Leafy Vegetables) நமக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தைப் பெற உதவுகின்றன.



### இலைவகைக் காய்கறிகள்

இலைவகைக் காய்கறிகளான தண்டுக்கீரை, அகத்திக் கீரை, முட்டைக்கோஸ், முருங்கை இலை, 'ஸ்பைனஸ்', புதினா போன்றவைகள் சிறந்த பாதுகாப்பு உணவாகும். ஏனென்றால் அவைகளில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவை அடங்கிய தாது உப்புகளும் வைட்டமின்களும் நிறைந்துள்ளன.

### விதைவகைக் காய்கறிகள்

விதை வகைக் காய்கறிகளான (Seed Vegetables) 'பீன்ஸ்' பட்டாணி, இளம் மக்காச்சோள விதை போன்றவைகள் வயிறு நிரம்புவதற்கான திடப்பொருள்களையும் (Roughage) புரதச்சத்து, வைட்டமின் 'சி' ஆகியவைகளையும் கொடுக்கின்றன.

### பழவகைக் காய்கறிகள்

பழவகைக் காய்கறிகளான (Fruit Vegetables) தக்காளி, பலாக்காய், வாழைக்காய், முருங்கைக் காய், கத்தரி, வெண்டை, பூசணி, பறங்கி போன்றவைகள் சிறந்த சத்துக்களைக் கொண்டுள்ளன. தக்காளியில் வைட்டமின் 'சி' யும், முருங்கைக்காயில் சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் 'சி'யும் நிறைய உள்ளன. பறங்கிக் காயில் வைட்டமின் 'ஏ' பெருமளவில் உள்ளன.

### கிழங்கு—வேர்வகைக் காய்கறிகள்


கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளான (Tuber & Root Vegetables) உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, கேரட், பீட்ரூட், முள்ளங்கி, 'டர்னிப்' போன்றவைகள் தானியங்களைப் போலவே மாவுப் பொருள்களையும், வைட்டமின் 'சி' யையும் வழங்குகின்றன. சர்க்கரை வள்ளிக்கிழங்கும், கேரட்டும் வைட்டமின் 'ஏ' யைக் கொடுக்கின்றன. இவ்வகைக் காய்கறிகள், உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் மாவுப் பொருள்களைக் கொடுப்பதால், நமது உணவில் தானியங்களுக்குப் பதிலாக இவைகளைப் பயன்படுத்தி, தானியங்களில் ஒரு பகுதியைக் குறைத்து, மீதப் படுத்தலாம். இவ்வகைக் காய்கறிகளே குறைந்த செலவில் சக்தியைத் தரும் உணவுகளாகும்.

சில முக்கிய காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்துகளைப் பின் கண்ட அட்டவணை 1 - இல் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை-1.

# ஒரு அவுன்சு (28 கிராம்) காய்களில் உள்ள ஊட்டச்சத்துகள்

| வரிசை எண் | காய்களின் பெயர் | புரதச்சத்து (கிராம்) | கொழுப்பு (கிராம்) | மாவுப்பொருள் (கிராம்) | சுண்ணாம்பு (மில்லிகிராம்) | பாஸ்பரஸ் (மில்லிகிராம்) | இரும்பு (மில்லிகிராம்) | உயிர்ச்சத்து-ஏ (இண்டர்நேஷனல் யூனிட்) | உயிர்ச்சத்து-பி (மில்லிகிராம்) | நிக்கோடினிக் அமிலம் (மில்லிகிராம்) | ரிபோபிளேவின் (மில்லிகிராம்) | உயிர்ச்சத்து-சி (மில்லிகிராம்) | கலோரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1. | முட்டைக்கோசு | 0.5 | 0.1 | 1.8 | 8 | 14 | 0.2 | 568 | 14 | 0.1 | 9 | 35 | 9 |
| 2. | காலிபிளவர் | 1.0 | 0.1 | 1.5 | 8 | 17 | 0.4 | $122\frac{1}{4}$ | 31 | 0.3 | 23 | 19 | 11 |
| 3. | காரட் | 0.3 | 0.1 | 3.0 | 23 | 8 | 0.4 | 568 | 17 | 0.1 | 6 | 1 | 13 |
| 4. | பீட்ரூட் | 0.5 | 0.1 | 3.9 | 57 | 17 | 0.3 | சிறு அளவு | 20 | 0.1 | 26 | 25 | 18 |
| 5. | முள்ளங்கி | 0.2 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 1 | 17 | ... | ... | 4 | 6 |
| 6. | உருளைக்கிழங்கு | 0.5 | 0.1 | 6.5 | 3 | 9 | 0.2 | சிறு அளவு | 6 | 0.3 | 3 | 1 | 28 |
| 7. | மரவள்ளிக்கிழங்கு | 0.2 | 0.1 | 10.9 | 10 | 10 | 0.2 | ... | 4 | 0.1 | 28 | ... | 45 |
| 8. | சர்க்கரை வள்ளிக் கிழங்கு | 0.3 | 0.1 | 8.8 | 6 | 10 | 0.2 | 3 | ... | 0.2 | 11 | 7 | 37 |
| 9. | கத்தரி | 0.4 | 0.1 | 1.8 | 60 | 17 | 0.4 | 1 | 4 | 0.2 | 26 | 6 | 10 |
| 10. | வெண்டை | 0.6 | 0.1 | 2.2 | 25 | 23 | 0.4 | 16 | 6 | 0.2 | ... | 4 | 12 |
| 11. | தக்காளிக்காய் | 0.5 | 0.1 | 1.3 | 6 | 11 | 0.7 | 91 | 7 | 0.1 | 17 | 9 | 8 |
| 12. | தக்காளிப்பழம் | 0.3 | 0.1 | 1.1 | 3 | 6 | 0.1 | 91 | 11 | 0.1 | 17 | 7 | 6 |
| 13. | பெல்லாரி வெங்காயம் | 0.3 | 0.1 | 3.3 | 50 | 14 | 0.2 | ... | 11 | 0.1 | 3 | 3 | 14 |
| 14. | நாட்டு வெங்காயம் | 0.5 | 0.1 | 3.7 | 11 | 39 | 0.3 | 7 | 22 | 0.1 | ... | ... | 17 |
| 15. | புடல் | 0.1 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 45 | ... | 0.1 | 17 | சிறு அளவு | 6 |
| 16. | பாகல் | 0.5 | 0.1 | 1.2 | 6 | 20 | 0.6 | 60 | 7 | 0.1 | 26 | 25 | 7 |
| 17. | பறங்கி | 0.4 | 0.1 | 1.5 | 3 | 8 | 0.2 | 24 | 6 | 0.1 | 11 | 1 | 8 |
| 18. | வெள்ளரி | 1.0 | 0.1 | 0.8 | 3 | 8 | 0.4 | சிறு அளவு | 8 | 0.1 | 1 | 2 | 4 |
| 19. | முருங்கைக்காய் | 0.7 | 0.1 | 1.0 | 8 | 30 | 1.5 | 52 | ... | 0.1 | ... | 34 | 7 |
| 20. | கருணைக்கிழங்கு | 0.4 | 0.1 | 7.5 | 17 | 6 | 0.4 | ... | 7 | 0.2 | ... | சிறு அளவு | 32 |
| 21. | பீன்ஸ் | 1.3 | 0.1 | 2.8 | 14 | 17 | 0.5 | ... | ... | 0.2 | ... | 3 | 17 |
| 22. | வாழைக்காய் | 0.4 | 0.1 | 4.2 | 3 | 8 | 0.2 | 14 | 4 | 0.1 | 57 | 7 | 18 |
| 23. | ஸ்பைனாஷ் | 0.5 | 0.3 | 1.1 | 17 | 3 | 1.4 | 994 | 20 | 0.1 | 17 | 14 | 9 |
| 24. | புதினா | 0.5 | 0.2 | 2.2 | 56 | 21 | 4.2 | 756 | 14 | 0.1 | ... | 3 | 16 |
| 25. | தண்டுக்கீரை | 1.4 | 0.1 | 1.6 | 14 | 3 | 6 | 700 முதல் 3,080 | 8 | 0.3 | ... | 48 | 17 |
| 26. | கறிவேப்பிலை | 1.7 | 0.3 | 4.4 | 224 | 17 | 0.8 | 3,528 | 22 | 0.6 | ... | 1 | 27 |



காய்கறிகளில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளதால் நாம் ஒவ்வொருவரும் இலை, விதை, பழம், வேர் மற்றும் கிழங்கு வகைக் காய்கறிகளை நமது உணவில் நாள்தோறும் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

### வீட்டுத் தோட்டத்தின் இன்றியமையாமை

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியாளர்களின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டின் மக்களுக்கு இந்த ஆண்டில் (1976-77), ஏறத்தாழ 42 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் சராசரியாக 10 அல்லது 12 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகளே உற்பத்தியாகி வருகின்றன. எனவே, நமக்குத் தேவைப்படும் காய்கறிகளில் நான்கில் ஒரு பகுதியையே நாம் தற்பொழுது உண்ண முடிகிறது.

ஊட்டமளிக்கும் காய்கறிகள் தேவையான அளவுக்கு நமக்குக் கிடைக்காததால், நம்மில் பலர் தேவையான அளவுக்கும் அதிகமான தானிய உணவை உண்ணுகின்றோம். இதனால் ஊட்ட உணவுப் பற்றாக்குறை (Under nutrition) ஏற்படுவதுடன், தானியப் பற்றாக்குறையும் ஏற்படுகிறது. ஊட்ட உணவுப் பற்றாக்குறையால் உடல் நலம் கெடும்; கண்பார்வை மங்கும்; உடல் வலிமை குன்றும்; உழைக்கும் ஆற்றல் குறையும்; உடல் எளிதில் கொடிய நோய்களால் தாக்கப்படும்.

இந்தியாவில் 100-க்கு 50 பேர்கள் ஊட்ட உணவுப் பற்றாக்குறை அல்லது ஊட்டக் குறைவினால் (Malnutrition) பாதிக்கப்படுகின்றார்கள் என்று உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health organisation) கருத்துத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் தற்பொழுது நிலவி வரும் ஊட்ட உணவுப் பற்றாக்குறை, ஊட்டக் குறைகளைப் போக்கிட காய்கறி உற்பத்தியைப் பெருக்கி நம் உணவில் காய்கறிகளைத் தேவையான அளவு சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, காய்கறி உற்பத்தியைப் பெருக்கிட, நாம் ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

### வீட்டுத் தோட்டத்தின் பயன்கள்

''பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழு'' என்பதுபோல், வீட்டுத் தோட்டம் அமைத்தால் கீழ்க்கண்ட பதினாறு பயன்கள் கிடைக்கும்.

1. புத்தம் புதிய காய்கறிகளைப் (Fresh Vegetables) பெறலாம்.

2. விருப்பமான காய்களைப் (Choice Vegetables) பெறலாம்.

3. பலவகைக் காய்களையும், பசுமையாகப் (Green Vegetables) பெறலாம்.

4. வேண்டியபோது, காய்களைப் பறித்துக்கொள்ளலாம்.

5. சுவை குன்றாத காய்களைப் (Tasteful Vegetables) பெறலாம்.

6. உயிர்ச் சத்துக்கள் மிகுந்த காய்களைப் (Vitamin-rich Vegetables) பெறலாம்.

7. குறைந்த செலவில் காய்களை விளைவிக்கலாம்.

8. சமையலறைக் கழிவு நீரையும் உபயோகப்படுத்த முடியும்.

9. வீட்டுக்கு அழகு சேர்க்கும்.

10. பொழுது போக்காகவும் அமையும்.

11. உடற் பயிற்சியாகவும் இருக்கும்.

12. கண்ணிற்குக் குளிர்ச்சி தரும்.

13. மனத்திற்கு அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கச் செய்யும்.

14. நல்வழியில் நாட்டம் ஏற்படுத்தும்.

15. சுவையான உணவு கிடைக்கச் செய்யும்.

16. நலமான வாழ்வு தரும்.

### வீட்டுத் தோட்டம் —அமைக்கும் முறை

1. குடும்பத்தினரின் விருப்பத்திற்கேற்றவாறும்,

2. கிடைக்கும் இடத்தின் அளவுக்குத் தகுந்தாற்போலவும்,

3. நிலத்திற்கும், பருவத்திற்கும் ஒத்ததாகவும்,

4. ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்கள் கிடைக்கும் வகையிலும்,

5. வரப்பின் பக்கம், வாய்க்கால் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகள் முதலிய இடங்களை நன்கு பயன்படுத்தும் முறையிலும்,

6. குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் வகையிலும்,

வீட்டுத்தோட்டத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும். ஆனால் சிலர் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் வெகு ஆர்வம் காட்டி ஈடுபட்டாலும், முதல் முயற்சியிலேயே தோல்வி கண்டுவிடுகின்றனர். இதற்குக் காரணம் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை உணராமையே! எனவே, வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை ஒவ்வொன்றாகக் கீழே விளக்கியுள்ளோம்.

### இடம்

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தி செய்ய 5 சென்ட் நிலம் வேண்டும்.

அந்த 5 சென்ட் நிலமும், குறைந்தது நாள்தோறும் 6 மணி நேரமாவது சூரிய வெளிச்சம் படக்கூடிய திறந்த வெளியாக இருக்க வேண்டும்.

ஐந்து சென்டு பரப்பு இல்லை யெனில், 100 சதுர அடியில்கூட வீட்டுத் தோட்டம் அமைக்க லாம்.

### மண்


மணலும், களிமண்ணும் சரி யான விகிதத்தில் அடங்கிய இரு-மண்பாடு நிலமே காய்கறி பயி ரிட மிகவும் சிறந்தது.

மணற்பாங்கான மண்ணாக இருந்தால், மாட்டெரு, கலவை எரு (கம்போஸ்டு) போன்ற கரிம எருக்களைப் போட்டு வளமான மண்ணாக்கி விடலாம்.

களி மண்ணாக இருந்தால், மணல், மக்கிய தழை, கரிம எருக்கள் ஆகியவைகளை இட்டும், வடிகால் வசதிகளை அமைத்தும் காய்கறி பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணாகச் செய்து விடலாம்.

### நிலம் தயாரித்தல்

5 சென்ட் நிலத்தையும், கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள படி பாத்திகள், நடைபாதை, மைய நடைபாதை, நிரந்தரப் பயிர்களுக்கான பகுதி என்று பிரித்துக் கொள்ள வேண்டும்.




நிலத்தின் பிற்பகுதியை நிரந் தரப் பயிர்களுக்காக ஒதுக்குதல் வேண்டும்.

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நான்கு கம்போஸ்டு குழி களையும் தோண்டுங்கள்.

பாத்திகள் ஒவ்வொன்றும் 20 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ளதாக இருக்க வேண்டும்.

பாத்திகளின் மேல் மண்ணை 1.5 அடி ஆழத்திற்குத் தோண்டி எடுத்து, அம்மண்ணிலுள்ள கற் களையும், கண்ணாடித் துண்டுகளை யும், புற்பூண்டுகளையும் அப்புறப் படுத்திவிட்டு, அம்மண்ணை ஒரு புறமாக வைக்க வேண்டும்.

1.5 அடிக்குக் கீழுள்ள மண்ணை மேலும் 1 அடி ஆழத்திற்குத் தோண்டி, மண் கட்டிகளை உடைத்து, இரு மண்பாடு நிலம் போல ஆக்க வேண்டும்.

அதில் 500 சதுர அடிக்கு 0.5 டன் அல்லது ஒரு வண்டி தொழு எரு அல்லது கலவை எருவை (கம்போஸ்டு) அடியுரமாக இட்டு மண்ணில் நன்கு கலக்குமாறு கொத்தி விட வேண்டும்.

எருவிட்ட மண்ணின் மேல், முதலில் எடுத்த 1.5 அடி மண்ணைப் போட்டுச் சமப்படுத்த வேண்டும்.


விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக 'செரசான்' என்ற பூஞ்சாள மருந்தை மண்ணில் கலந்து, பயிர்களை நோய்கள் தாக்காவண்ணம் தடுக்க வேண் டும்.

விதைப்பதற்கு 3 நாட்கள் முன்னதாக டி.டி.டீ. மருந்தை மண்ணில் கலந்து எறும்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

### பட்டம்

காய்கறி சாகுபடி செய்ய (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடி), (2) ஜனவரி-பிப்ரவரி (தை) ஆகிய இரண்டும் முக்கிய விதைப்புப் பட்டங்களாகும்.

வீட்டிற்கு வேண்டிய காய்கறி களை ஆண்டு முழுவதும் தொடர்ந்து பெற அட்டவணை-2 இல் கண்டபடி பயிரிடுவதே சிறந்ததாகும்.



அட்டவணை—2.

# ஆண்டு முழுவதும் காய்கறி பெறுவதற்குரிய வழிமுறை

| பாத்தி எண் | காய்கறிகளின் பெயர் | பயிர் செய்வதற்கான பட்டங்கள் |
|---|---|---|
| பாத்தி 1 | கத்தரி, முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | முட்டைகோஸ் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | வெண்டை | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 2 | கொத்தவரை | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | பீட்ரூட் | அக்டோபர் முதல் டிசம்பர் வரை. |
| | கீரை வகைகள் | ஜனவரி முதல் பிப்ரவரி வரை. |
| | தட்டைப்பயறு | மார்ச்சு முதல் மே வரை. |
| பாத்தி 3 | காராமணி, | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | கத்தரி, டர்னிப் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கொத்தவரை | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 4 | வெண்டை | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | தட்டைப்பயறு | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | முள்ளங்கி | பிப்ரவரி முதல் மார்ச் வரை. |
| | கீரை வகைகள் | ஏப்ரல் முதல் மே வரை. |
| பாத்தி 5 | மிளகாய், முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | வெண்டை | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கத்தரி, வெங்காயம் | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 6 | பெல்லாரி, வெங்காயம் | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | மிளகாய் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கீரை வகைகள் | பிப்ரவரி முதல் மார்ச் வரை. |
| | முள்ளங்கி | ஏப்ரல் முதல் மே வரை. |

கீரை வகைகள், முள்ளங்கி, கத்தரி, வெண்டை, தக்காளி, கொத்தவரை ஆகிய வகைகளை ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

அவரை, பூசணி, பாகல், புடலை ஆகியவைகளை ஜூலை- ஆகஸ்ட் (ஆடி), டிசம்பர் - ஜனவரி (மார்கழி) ஆகிய பட்டங்களில் விதைக்கலாம்.


முட்டைக்கோஸ், 'காலிபிளவர்', 'நூல்கோல்', 'பீட்ரூட்', 'கேரட்' ஆகியவைகளை அக்டோபர் முதல் டிசம்பர் வரை விதைக்கலாம்.

### விதைப்பு

கலப்பில்லாத, திடமான நல்ல முளைப்புத் திறன் உடைய விதைகளை விதைப்பதே சிறந்தது. விதைப்பதற்கு முன் விதைகளை 'அக்ரசான்' மருந்தில் கலந்து விதைக்க வேண்டும். கத்தரி, மிளகாய், தக்காளி, ஆகியவைகளை மேடான பாத்திகள் (Raised Beds) அமைத்து நாற்று விடுதலே சிறந்தது.

நாற்றுவிட மரப்பெட்டிகளையும் உபயோகிக்கலாம்.

கீரை போன்ற சிறிய விதைகளோடு எட்டு பாகம் மணலைக் கலந்து விதைத்தல் நல்லது.



நாற்றங்காலில் விதைகளைப் பரவலாக விதைப்பதே நல்லது.

வரிசைகளில் நாற்று விடுவதும் நல்லது.

விதைத்த விதைகள் முளைத்து வரும்போது, அவைகளைப் பறவைகள் தின்றுவிடாமல் தடுக்க, விதைப் பாத்திகளின் மேல் வைக்கோலைப் பரப்பி வைக்கலாம்.

விதைப் பாத்திகளுக்கு பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

ஒரு மாதத்திற்குப் பின் நாற்றுகளைப் பறித்து நடவு செய்தல் வேண்டும்.


நாற்றுகளைப் பறித்து நடுவதற்கு முன் நாற்றங்காலில் தாமிர பூசண கொல்லி மருந்து, என்ட்ரின் அல்லது பாரத்தியான் மருந்து ஆகியவைகளைத் தண்ணீரில் கலந்து தெளித்தல் நல்லது.

நாற்றுகளை வரிசை வரிசையாக நடுவதே சிறந்தது.

கிழங்கு வகைச் செடிகளுக்கு வரிசையில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளியும், வெண்டை, கத்தரி, தக்காளி ஆகியவைகளுக்கு 1.5 முதல் 2 அடி இடைவெளியும் விட்டு நடுதல் சிறந்தது.

### உரமிடுதல்

பொதுவாக எல்லாக் காய்கறி செடிகளுக்கும் (பூசணி ரகங்களைத் தவிர) ஒரு சதுர மீட்டருக்கு 50 கிராம் வீதம் இரசாயன உரங்கள் இடவேண்டும். அதில்,



அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட்—1 பங்கும்

சூப்பர் பாஸ்பேட்—2 பங்கும்

மூரியேட் ஆப் பொட்டாஷ்—1 பங்கும் கலந்திருக்க வேண்டும்.

சிறப்பாக நல்ல மகசூல் எடுப்பதற்கு அட்டவணை 4-இல் குறிப்பிட்டுள்ளது போல, குறிப்பிட்ட காய்கறிப் பயிருக்கு, குறிப்பிட்ட இரசாயன உரங்களைக் குறிப்பிட்ட அளவில் இட வேண்டும்.

அடிஉரத்தை, நாற்றுகளை நடுவதற்கு ஒருவாரம் முன்பாக இட்டுவிட வேண்டும்.

மேலுரமாக இரசாயன உரங்களை இட ஊடுழவு செய்யும் போது அல்லது களையெடுக்கும் பொழுது இடுவதே நல்லது. இரசாயன உரங்களை செடிகளினின்று 10 செ. மீ. தூரம் தள்ளி வைத்து அவைகளை மண்ணுடன் நன்ருகக் கலக்குமாறு செய்ய வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.

பூசணி, புடலை, பீர்க்கு, பாகல், சுரை ஆகியவைகளுக்கு ஒரு குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கலவை எருவையும், அட்டவணை-4-ல் குறிப்பிட்டுள்ள உரங்களையும் விதைகளை நடுவதற்கு முன்பு இடவேண்டும். பூக்கும்பொழுது ஒரு குழிக்கு 12 கிலோ தொழு எரு இடுவது சிறந்தது.

## களை எடுத்தலும் —மண் அணைத்தலும்

மண்ணில் தகுந்த காற்ரேட்டம் ஏற்பட்டு, செடிகள் நன்கு வளர களை எடுத்தல் அவசியம். களைகள் தோன்றிய உடனேயே அவைகளை அகற்றிவிட வேண்டும்.

களையெடுக்கும் போது செடிகளின் வேர்களுக்கு கெடுதி ஏற்படாமல் களையெடுக்க வேண்டும். கிழங்கு வகைப் பயிர்களுக்கு மண் அணைக்க வேண்டும்.

## நீர்ப்பாசனம்

விதைகள் முளைக்கும்போது பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

இளஞ்செடிகளுக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

குறைந்த ஈரத்தன்மை, அதிக ஈரத்தன்மை ஆகிய இரு நிலைமைகளுமே செடிகளுக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடும். எனவே தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்பே, மண்ணில் 5 முதல் 6 சென்டிமீட்டர் ஆழத்தில் உள்ள மண்ணின் நிலைமையை அறிந்து அதற்கேற்பத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுவ்து மிகவும் அவசியம்.

''கேரட்'' போன்ற வேர்க் காய்கறிப் பயிர்களுக்கு அறுவடைக்கு 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விடுவது நல்லது. இவ்வாறு செய்வது கிழங்குகளுக்கு நல்ல சுவையையும், நல்ல நிறத்தையும் கொடுக்கிறது.

## பயிர்ப்பாதுகாப்பு

விதைகளை விதைப்பதற்கு முன்பாக 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலந்து விதைக்க வேண்டும்.

செடிகளில் பூச்சிகளையோ அல்லது நோய்களையோ கண்டால் உடன் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து தகுந்த தடுப்பு முறைகளை அறிந்து, அதன்படி, செய்யுங்கள்.

பூச்சிகள் வராமல் இருக்க, முன் தடுப்பாக 15 நாட்களுக்கு ஒரு தடவை 'என்ட்ரின்' அல்லது 'பாலிடால்' அல்லது 'ரோகார்' தெளிக்க வேண்டும். அது போலவே நோய்கள் வராமல் இருக்க முன் தடுப்பாக மாதமொருமுறை தாமிரப் பூசணக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டும்.

புடல், பாகல், பறங்கி, பீர்க்கு போன்ற பூசணி வகைக் காய்கறிச் செடிகளுக்கு டி.டி.டி. (D. D. T.) அல்லது பி.எச்.சி. (B. H. C.) ஆகிய மருந்துகளைத் தூவுதலோ அல்லது தெளித்தலோ கூடாது.

பூசணி வகைக் காய்கறிச் செடிகளைப் பூச்சி தாக்கா வண்ணம் பாதுகாக்க 'லின்டேன்' தெளிக்க வேண்டும்.

காய்களை அறுவடை செய்வதற்கு 2 வாரத்திற்கு முன்பாகவே மருந்து தெளிப்பதையோ அல்லது மருந்து தூவுதலையோ நிறுத்திட வேண்டும்.



**எல்லா இடங்களையும் பயனுள்ள முறையில் சாகுபடி செய்தல்:**

வீட்டுத் தோட்டத்தின் எந்தப் பகுதியையும் வீணாகப் போடாமல் நன்கு பயன்படுத்தினால் மிகுந்த பலன் பெறலாம். திட்டமிட்டுப் பயிர் செய்தால், ஒரு அங்குல மண்ணைக்கூட வீணாக்காமல், பயன்படுத்தலாம்.

குறிப்பாக குடும்பத் தலைவிகள் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது வீட்டுத் தோட்டத்திற்கென ஒதுக்கி எல்லா வேலைகளையும் செய்ய முயன்றால், ஒரு அங்குல இடத்தைக்கூட வீணாக்காமல் பயன்படுத்தி, காய்கறிகள் விளைவை அதிகப்படுத்த முடியும். வீட்டுத் தோட்டத்திலுள்ள நடை பாதைகள், மைய நடை பாதை, வரப்பின் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், உயிர் வேலிகள், கலவை எருக் குழிகள், நிரந்தரப் பயிர்கள் பகுதி ஆகியவைகளைப் பின்கண்ட முறையில் நன்கு பயன்படுத்தி, மிகுந்த பயன் பெறலாம்.

### நடைபாதை

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றியுள்ள நடைபாதை, மைய நடை பாதை ஆகியவற்றின் ஓரங்களில் குறுகிய கால வயதுடைய பலவகைக் கீரைகளை வளர்க்க வேண்டும். அவ்வோரங்களில் தண்டுக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக்கீரை, ஸ்பைனாஷ், புதினா ஆகியவைகளைப் பயிரிடுங்கள். நடைபாதையின் ஒவ்வொரு ஓரத்திலும் ஒவ்வொரு வகைக்கீரை பயிரிடுங்கள். கீரைகளை வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

### மைய நடைபாதை

மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரை படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், மைய நடை பாதையின் இரண்டு ஓரங்களிலும் செடிக்குச் செடி 2 முதல் 4 அடி இடைவெளிவிட்டு தக்காளிக் கன்றுகளை நட்டு வளருங்கள். தக்காளிச் செடிகளை தனிக்குச்சிகளில் இணைத்துக் கட்டி 4 முதல் 5 அடி உயரம் வரை வளர விடலாம்.

மைய நடைபாதையில் பன்னீர் திராட்சை (''மஸ்காட்''), ''அனப்-இ-ஷாஹி' போன்ற திராட்சைகளின் பதியங்களை நடுங்கள். மையநடைபாதையின் மேல் ஓர் பந்தல் அமைத்து அதன் மேல் திராட்சைக் கொடியைப் படரவிடுங்கள்.

### வரப்பின் ஓரங்கள்

இரண்டு முக்கிய பாத்திகளை நீண்ட வாக்கில் பிரிக்கும் வரப்புகளின் ஓரங்களில் கீரை வகைகள் முள்ளங்கி, வெங்காயம் போன்றவைகளைப் பயிரிடுங்கள்.

### தட்டிகள், வேலிகள்

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகளில் பசலை, பாகல், பீர்க்கன், கோவைக் காய், சௌ-சௌ முதலிய கொடி வகைச் செடிகளை வளர்க்க வேண்டும். இவைகளையும் வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

### கலவை எருக் குழிகள்

காய்கறிச் செடிகளிலிருந்து விழும் காய்ந்த இலைகள், அறுவடைக்குப் பின் வெட்டப்பட்ட செடிகள், வீட்டில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றை அவ்வப்போது கலவை எருக் குழிகளில் (கம்போஸ்ட் குழிகள்) நிரப்பி, மண்ணால் மூடி எரு தயாரிக்கவும்.

கலவை எருக் குழிகளை மூடியுள்ள மேல் மண்ணிலேயே புடல், அவரை போன்ற விதைகளை ஊன்றலாம். அல்லது தொட்டிகளில் விதைகளை ஊன்றி கலவை எருக் குழிகளின் மேல் வைக்கலாம்.

கலவை எருக் குழிகளின் மேல் பந்தல் அமையுங்கள். அப்பந்தலின் மேல் புடல், அவரை போன்ற கொடிகளைப் படர விடுங்கள்.

### நிரந்தரப் பயிர்கள் பகுதி

நிரந்தரப் பயிர்களுக்காக, வீட்டுத் தோட்டத்தின் பின் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழை, கறி வேப்பிலை, ஜாப்னா முருங்கை, தவசிக்கீரை அல்லது, செக்கூர் மணிஸ்' எனப்படும் உயிர்ச்சத்துக் கீரை (Multi-Vitamin Greens) மரவள்ளிக் கிழங்கு, கத்தரி, தென்னை ஆகிய நிரந்தரப் பயன்தரும் செடிகளை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் இப் பகுதியில் ஒன்றிரண்டு பழச் செடிகளையும் வளர்த்தல் நல்லது. ஏனென்றால் பெரும்பாலான பழங்கள் குடற்பகுதிகளை நல்ல நிலையிலும், சுறுசுறுப்பாகவும்




வைப்பதற்கு வேண்டிய திடப் பொருட்களைக் (Roughage) கொடுத்து உதவுவதுடன் உயிர்ச் சத்து (வைட்டமின்) 'ஏ' உயிர்ச் சத்து (வைட்டமின்) 'சி' தாது உப்புகள் ஆகியவற்றையும் கொடுக்கின்றன.

மேலும் வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் குறைந்தது 84 கிராம் (3 அவுன்சு) பழங்களை உண்ண வேண்டும் என்று ஊட்ட உணவு ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுவதால் நமக்குத் தேவையான பழங்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பப்பாளியை நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம். பப்பாளி ஆண்டு முழுவதும் பழம் கொடுப்பதுடன், நமக்குத் தேவையான வைட்டமின் 'ஏ' யையும் கொடுக்கிறது.

நமக்குப் பலவகையிலும் பயன்படும் எலுமிச்சையையும், வைட்டமின் 'சி' நிறைந்த 'மேற்கு இந்திய செர்ரி' (West-Indian Cherries) போன்றவைகளையும் நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம்.

நிரந்தரப் பயிர்களின் இடைவெளிகளில் சர்க்கரை வள்ளி, தட்டைப் பயறு, பீன்சு போன்றவைகளைப் பயிரிடலாம்.

வாழையின் நிழலில் ஓரிரண்டு சேனைக் கிழங்குகளை நடலாம்.





## வீட்டுத் தோட்டம் அமைக்கப் போதிய இடம் இல்லை என்றால் என்ன செய்வது?

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுத் தோட்டம் அமைக்க 5 சென்ட் நிலம் தேவை என்ற விகிதப்படி காலி இடம் இல்லை என்றாலும், பெரும்பாலான வீடுகளின் பின்புறத்தில் மிகக் குறைந்தது 100 சதுர அடி பரப்பு இடமாவது காலியாக (வெறுமனே) கிடக்கிறது. அந்தக் காலி இடங்களில் கீழே படத்தில் கண்டபடி வீட்டுத் தோட்டம் அமைக்கவும்.

### *100 சதுர அடி மாதிரி வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறை:*

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நிலத்தைச் சுற்றிலும் மூங்கிலால் செய்யப்பட்ட வேலி ஒன்றை அமையுங்கள். இவ்வேலியில் பசலை, பாகல், பீர்க்கு, தொண்டங்காய் முதலிய கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

4 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட 4 பாத்திகளை அமையுங்கள், அப்பாத்திகளை முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல் தயார் செய்யுங்கள்.


நிலத்தின் நடுவில் 2 அடி அகலத்திற்கு நடைபாதை அமையுங்கள். நடைபாதையின் இரு புறத்திலும் ஓரங்களில் கொத்தமல்லி, வெந்தயம், புதினா முதலியவைகளைப் பயிரிடுங்கள்.

நிலத்தின் குறுக்காகச் செல்லும் அடுத்த நடைபாதையின் இருபுறத்திலும் முள்ளங்கியினை பயிரிடுங்கள். முள்ளங்கி விதைகளை 1 அடி இடைவெளிக்கு ஒன்றாக நடுங்கள்.

அல்லது படத்தில் கண்டுள்ளது போல் தக்காளிக் கன்றுகளை நடவு செய்து, கம்புகள் அல்லது குச்சிகளுடன் இணைத்துக் கட்டுங்கள்.

100 சதுர அடி பரப்புள்ள வீட்டுத் தோட்டத்திலிருந்து ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்களைப் பெற, 4 பாத்திகளிலும் அட்டவணை-3-இல் கண்டபடி பயிரிடுங்கள்.

ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் வீட்டுத் தோட்டம் போடக் குறைந்தது 100 சதுர அடி இடம் கிடைக்குமாதலின், 100 சதுர அடியில் பயிரிடுவதற்கு ஏற்ற முக்கிய காய்கறிகள், அவைகளை விதைக்கும் காலம், அறுவடை செய்யும் காலம், மகசூல் ஆகியவைகளை அட்டவணை-4-இல் விரிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




| அட்டவணை—3. | | |
|---|---|---|
| பாத்தி எண் | பருவம் | காய்கறிகளின் பெயர் |
| பாத்தி 1 | ஜூன்—ஜூலை | கீரை வகைகள் |
| | ஆகஸ்டு—நவம்பர் | வெண்டை |
| | டிசம்பர்—பிப்ரவரி | வெங்காயம் |
| | மார்ச்—ஜூன் | கத்தரி |
| பாத்தி 2 | ஜூன்—செப்டம்பர் | வெண்டை |
| | அக்டோபர்—மார்ச் | கத்தரி |
| | பிப்ரவரி—மார்ச் | கீரை வகைகள் |
| | ஏப்ரல்—மே | முள்ளங்கி |
| பாத்தி 3 | ஜூன்—செப்டம்பர் | தக்காளி |
| | அக்டோபர்—டிசம்பர் | முள்ளங்கி |
| | ஜனவரி—பிப்ரவரி | கீரை வகைகள் |
| | மார்ச்—ஜூன் | வெண்டை |
| பாத்தி 4 | ஜூன்—செப்டம்பர் | கத்தரி |
| | அக்டோபர்—நவம்பர் | கீரை வகைகள் |
| | டிசம்பர்—நவம்பர் | வெண்டை |
| | ஏப்ரல்—ஜூன் | காராமணி |

(தொடரும்.)

# காற்று நிகர் மென்மை
# வண்ணத்துப் பூச்சியின்
# எழில் வண்ணம்



## கோ-ஆப்டெக்ஸ்

### அச்சிட்ட நூல் சேலைகள்

உண்மைதான்! மென்மையான
அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன
டிசைன்கள்—யமுனா, அஜந்தா,
சாமுண்டி-உள்ளங்கவர்
வகைகள்—பரவசமூட்டும்
வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட சேலைகள் இன்றைய
நாகரீகமாகத் திகழ்பவை!

கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி



# நமது குடியரசுத் தலைவர்

(வாழ்க்கை வரலாறு)

இந்தியாவின் ஆறாவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் மிகப் பெரிய அரசியல்வாதியாகவும், நிர்வாகியாகவும் திகழ்பவர். இந்தியா சுதந்தரம் அடைவதற்கு முன்பும், அடைந்த பின்பும் அநேக முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார். 1913ஆம்ஆண்டு மே மாதம் 19-ந் தேதி ஆந்திரப் பிரதேஷ், அனந்தப்பூர் மாவட்டத்தின் இல்லூரு என்னும் கிராமத்தில் திரு. சஞ்சீவ ரெட்டி ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். சென்னை, அடையாறில் உள்ள பழம் பெரும் கல்வி நிலையமான தியாசாபிகல் உயர்நிலைப் பள்ளியில் அவர் தமது துவக்கக் கால கல்வியைப் பயின்றார். பின்னர் அனந்தப்பூர் கலைக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

இளைஞரான சஞ்சீவரெட்டிக்கு கல்வியில் நாட்டம் செல்லவில்லை. விடுதலை இயக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. ஆகவே, 1931-ல் அவர் தமது கல்லூரிப் படிப்பைத் துறந்தார். இளைஞர் ஸ்தாபனம், மற்ற தேசிய நடவடிக்கைகள் ஆகியவற்றில் அவர் தமது மாணவப் பருவத்தைக் கழித்தார். உண்மையில், மாணவர் சத்தியாகிரகம் ஒன்றில் அவர் கலந்து கொண்டபோதுதான், அவர் யாரென்று முதலில் தெரிய வந்தது.

திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் 25-வது வயதில் ஆந்திரப் பிரதேஷ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பத்தாண்டுகள் அவர் இப்பதவியை வகித்து வந்தார். 1940 முதல் 1945 வரையான காலத்தில் பெரும்பாலான பகுதியை அவர் சிறையிலேயே கழித்தார். 1942-இல் அவர் சிறிது காலம் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் மறுபடியும் அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மீண்டும் கைது செய்யப்பட்டு தற்போது மஹாராஷ்டிராவிலுள்ள அம்ரௌத்தி சிறைச்சாலையில் அவர் மீண்டும் அடைக்கப்பட்டார். இச் சிறையில் திரு. பிரகாசம், திரு. சத்யமூர்த்தி, திரு. காமராஜ், திரு. கிரி போன்ற பெருந் தலைவர்களுடனும், இன்னும் மற்றவர்களுடனும் திரு. ரெட்டி 1945 வரை இருந்தார்.

1946ல் சென்னை சட்டசபைக்கு திரு. ரெட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கடுத்த வருடம், சென்னை சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் செயலாளரானார். 1947ல் அவர் இந்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர் ஆனார்.

1949 ஏப்ரல் முதல் 1951 ஏப்ரல் வரை சென்னை கூட்டு மாகாணத்தில் மது விலக்கு, வீட்டு வசதி, காடுகள் ஆகிய துறைகளின் அமைச்சராக இருந்தார். 1951ல் ஆந்திரப் பிரதேஷ் காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும்

பொருட்டு அமைச்சர் பதவியை அவர் ராஜினாமா செய்தார். காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் அவர் வெற்றி பெற்றார். இந்தச் சமயத்தில்தான் அவரது ஐந்து வயது மகன் மோட்டார் விபத்தில் மரணம் அடைந்தான். மகன் இறந்த வருத்தத்தை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவர் பெருத்த அதிர்ச்சிக்கு உள்ளானார். அதனால் திரு. ரெட்டி ஆந்திரப் பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். பின்னர் அவரது ராஜினாமாவை வாபஸ் பெறுமாறு பலர் அவரை வற்புறுத்தினர்.

1952ல் திரு. ரெட்டி ராஜ்ய சபா உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபையில் 1953ல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் கூட, மறைந்த திரு. டி. பிரகாசம் அமைச்சரவையில் துணை முதலமைச்சர் பதவியை அவர் ஏற்றுக் கொண்டார். 1955-ஆம் ஆண்டில் அவர் மறுபடியும் சட்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திரு. பி. கோபால ரெட்டியின் அமைச்சரவையில் துணை முதலமைச்சரானார்.

1956 அக்டோபரில் திரு. ரெட்டி மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டதையொட்டி புதிதாக அமைக்கப்பட்ட ஆந்திரப் பிரதேஷ் மாநிலத்தின் முதலமைச்சரானார். இந்திய தேசிய காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பொருட்டு 1959ல் அவர் தமது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1962 மார்ச் மாதத்தில் அவரது பதவிக் காலம் முடிவடைந்தது. மறுபடியும் அவர் ஆந்திரப் பிரதேஷின் முதலமைச்சரானார். பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் மீது மக்களின் நம்பிக்கை குறையக்கூடாது என்பதற்காக, 1964 பிப்ரவரியில் அவர் தாமாகவே முன்வந்து தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். அவர் மறுபடியும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயினும் புதிய அமைச்சரவையை அமைப்பதற்கு அவர் தமது சகாவான திரு. கே. பிரம்மானந்த ரெட்டியை அழைக்குமாறு ஆளுநருக்குப் பரிந்துரை கூறினார்.

1964 ஜுன் 9ஆம் தேதி திரு. லால் பஹதூர் சாஸ்திரி அமைத்த மத்திய அமைச்சரவையில் எஃகு, சுரங்கங்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1964 நவம்பரில் அவர் ராஜ்யசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் 1966 ஜனவரி முதல் 1967 மார்ச் வரை, போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து, கப்பல்போக்குவரத்து, சுற்றுலா ஆகிய துறைகளின் அமைச்சராக திரு. ரெட்டி பணியாற்றினார். 1967 பொதுத் தேர்தலில் ஆந்திரப் பிரதேஷில் இந்துபூர் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்கு அவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 மார்ச் 7-ஆம் தேதி மக்கள் சபையின் அவைத் தலைவராகத் திரு. ரெட்டி தேந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவிதான் அவருக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் பேரும், புகழும் ஈட்டித் தந்தது.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு திரு. ரெட்டியின் வேட்பு மனுவை திருமதி இந்திரா காந்தி தாக்கல் செய்ததனால், 1969 ஜுலை 9ஆம் தேதி திரு. ரெட்டி மக்கள் சபை அவைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது அனைவரும் அறிந்ததே.

1969க்குப் பிறகு திரு. ரெட்டி தனது நேரத்தை விவசாயத்தில் முழு மூச்சாக ஈடுபடுவதன் மூலம் கழித்தார். விவசாயம் எப்போதும் அவரது உயிர் மூச்சாக விளங்கியது. ஆனாலும் 1975 மே மாதம் முதல் தேதியன்று ஐதராபாத்தில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதன் மூலம், அவர் மறுபடியும் தீவிர அரசியலில் ஈடுபட்டார்.

1977 மார்ச் மாதத்தில் நடைபெற்ற மக்கள் சபைத் தேர்தலில் ஆந்திரப் பிரதேஷில் உள்ள நந்தியால் தொகுதியிலிருந்து ஜனதா கட்சி வேட்பாளராக திரு. ரெட்டி போட்டியிட்டார். அத்தேர்தலில் ஆந்திரப் பிரதேஷ் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அல்லாத உறுப்பினர் திரு. ரெட்டி ஒருவர்தான்.

1977 மார்ச் 26ஆம் தேதி மக்கள் சபையின் அவைத் தலைவராக திரு. ரெட்டி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் பொருட்டு 1977 ஜுலை 13ஆம் தேதி திரு. ரெட்டி தனது அவைத் தலைவர் பதவியைத் துறந்தார். குடியரசுத் தலைவர் பதவிக்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்ற வேட்பாளராக ஏகமனதாக அவர் நியமிக்கப்பட்டார். சமீபத்திய அரசியல் வரலாற்றில் இது அரியதொரு நிகழ்ச்சியாகும். 1977 ஜுலை 21-ஆம் தேதி இந்தியக் குடியரசுத் தலைவராக அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்.


திரு. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் 1958ல் திரு. சஞ்சீவ ரெட்டிக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

திரு. சஞ்சீவ ரெட்டி 1935 ஜுன் 8-ஆம் தேதி திருமணம் செய்து கொண்டார். இவரது மனைவியின் பெயர் திருமதி நாகரத்தினம்மாள். இவர்களுக்கு ஒரு மகனும், மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

## ஆடிப்பட்டம் காய்கறி விளக்க விழா



ஆடிப்பட்டம் காய்கறி விளக்க விழாவினை 29-7-'77 அன்று மாலை 3.30 மணிக்கு சென்னை, இராணி மேரிக் கல்லூரியில் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழா 29-7-77 முதல் 16-8-'77 வரை சென்னையில் உள்ள பொது நிறுவனங்களில் நடைபெறும். விழா நடைபெறும் காலத்தில் அந்தந்த நிறுவனங்களில், நடமாடும் விற்பனைப்பகுதி மூலம் தரமான காய்கறி விதைகள், நாற்றுக்கள், தென்னை மற்றும் பழ விதைகள், வாழைக் கன்றுகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உர மருந்துப் பொட்டலங்கள் ஆகியவைகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



# கல்வியே ஆற்றல்!

மாண்புமிகு கல்வி அமைச்சர்
செ. அரங்கநாயகம் அவர்கள்

"மதிப்புக்குரிய ஆசிரியப் பெருமக்களே!

"அன்புள்ள மாணவர்களே!

"வானொலி நிலயத்தார் இன்று முதல் கல்வி ஒலிபரப்புகளைத் துவக்குகின்றனர்—பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவுகின்ற வகையிலும், கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்குப் பயன்தரும் முறையிலும், நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக நடந்து வருகின்ற இவ்வகை நிகழ்ச்சிகள் நல்ல பலனைத் தந்து வருகின்றன.

"நீங்களெல்லாம், இன்று தொடங்கப்படும் இந் நிகழ்ச்சிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வீர்களென நம்புகிறேன்.

"மாணவர்களைக் கவரும் வண்ணம் நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கல்விப் பணி புரியும் வானொலி நிலயத்தாரை நான் பாராட்டுகிறேன்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

—என்பது குறட்பா.

"கண்ணுடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர்கள் கற்றவர்களே. மற்றையோர் கல்லாதவர். அவர்கள் கண்ணில்லாதவர்கள். அவர்கள் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையவர்களே. இதுதான் வள்ளுவரின் கருத்து.

"ஒருவன் தான் பெறுகின்ற கல்வியின் மூலம்தான் வாழ்க்கையில் பல்வேறு உண்மைகளைக் காணுகின்ற பார்வையை —ஆற்றலைப்—பெறுகிறான்.

"படிக்கின்ற மாணவர்கள் இதை உணர்வீர்களேயானால், படிப்பிலே மிகுந்த அக்கறையைக் காட்டுவீர்கள், நல்ல முறையில் படிப்பீர்கள் என நம்புகிறேன்.

"கல்வி இல்லையேல் நமக்கு நல்ல எதிர்காலம் இல்லை. மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றுத்தருபவற்றைக் கவனித்துப் படித்துத் தேர்ச்சிபெற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் இயற்கைச் செல்வங்களைப் பொறுத்தது என்பதைவிட, அந்நாட்டு மக்களின் அறிவையும், ஆற்றலையும் பொறுத்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

"சமுதாயத்தின் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கின்ற பணியைத்தான் கல்வி செய்கிறது.

"கற்பதைக் கசடறக் கற்று, கற்றபின் அதற்குத் தக நாம் நடப்போமேயானால், சமுதாயம் நிச்சயம் முன்னேறும். நாம் காணும் பல்வேறு கஷ்டங்கள் மறையும்.

"இப்பெரும் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட ஆசிரியப் பெருமக்கள் இந் நிகழ்ச்சிகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; மாணவர்களை முன்னதாகவே தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

"வானொலி நிலையத்தார் பாடங்களைக் கவர்ச்சிகரமாக நடத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். பாடல், நாடகம், கேள்விகள் போன்ற பகுதிகளையும் வைத்துள்ளனர். இதன்மூலம் கல்வியறிவு பெறுவது எளிதாக்கப்படுகிறது.

"இவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் நல்ல முன்னேற்றம் அடைய வேண்டும், அவர்கள் முயற்சிகளில் வெற்றி பெறவேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்."

—[18.7.1977 அன்று அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலையத்தில் கல்வி ஒலிபரப்புகளைத் தொடங்கி வைத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் ஆற்றிய சிறப்புரை.]



"நாடு வாழ நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லாருக்கும் வேண்டும்.

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்கு எந்த அளவு தருகின்றோமோ அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயர முடியும்".

—பேரறிஞர் அண்ணா

# எல்லோரும் பாராட்டும் கல்வி ஒலிபரப்புகள்



எம். எஸ். கோபால்,
சென்னை வானொலி நிலைய
இயக்குநர்

"கல்வி ஒலிபரப்புகள் சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து தொடங்கப்பட்டு, ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஆகின்றன என்றால் உங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும். படிப்படியாகக் கல்வி ஒலிபரப்புகள் விரிவாக்கப்பட்டு, இன்று வகுப்பு வாரியாக, பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு, நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

"வகுப்பறைக் கல்வியோடு, பல துறைகளிலும், பலவகைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குச் சென்று கண்டு கேட்டு அறிவதன் மூலம் மாணவர்களுக்கு வெளி உலக அனுபவமும், பொது அறிவும் வளர வாய்ப்பு ஏற்படும். இந்த அடிப்படையில் வானொலி நிலையம் மூலம் பல இடங்களைச் சென்று பார்த்து வரும் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

"கடந்த ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சுமார் 22 பள்ளிகளைச் சேர்ந்த 300-க்கும் அதிகமான மாணவ மாணவியர் சேர்ந்து பாடிய நிகழ்ச்சி கண்ணுக்கும், கருத்துக்கும், காதுக்கும் இனிய விருந்தாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் பலர் ஒன்று சேர்ந்து பாடும் கலையில் ஒரு சாதனையையும் புரிந்தது.

"சென்ற ஆண்டு ஒன்பதாம் வகுப்பிற்கும், ஏழாம் வகுப்பிற்கும் ஒலிபரப்பான 'சேர்ந்து பாடுவோம்' நிகழ்ச்சி, இந்த ஆண்டு, பத்தாம் வகுப்பிற்கும், எட்டாம் வகுப்பிற்கும் விரிவாக்கப்பட்டிருக்கின்றது. நாட்டுப்பற்று, ஒருமைப்பாட்டு உணர்ச்சி, கடமை உணர்வு, சுட்டுப்பாடு, ஒழுக்கம், கூட்டுறவு, சமுதாயப் பொறுப்புகள் போன்ற உயரிய பண்புகளை வளர்க்கக்கூடிய பாடல்கள் 'சேர்ந்து பாடுவோம்' இசை நிகழ்ச்சியின் மூலம் பெற முடியும். தேசிய கவி பாரதி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தமிழன்பன் ஆகியோர் எழுதிய இந்தப் பாடல்களை நீங்களும் கேட்டுச் சேர்ந்து பாடுவதன் மூலம் உள்ளத்தில் ஒற்றுமை உணர்வும், பரந்த மனப்பான்மையும் இசையின்பமும் ஊற்றெடுக்கும். இந்நிகழ்ச்சியின் முக்கியத்துவம் கருதி, சென்னை வானொலி நிலையப் பாடற் குழுவினர், விருப்பம் தெரிவிக்கும் நகரிலுள்ள சில பள்ளிகளுக்கு நேரில் சென்று சேர்ந்து பாடுவோம் நிகழ்ச்சியினை நடத்தி, மாணவர்கள் பாடல்களை விரைவில் கற்றுக்கொள்ளவும் சேர்ந்து பாடும் திறனைப் பெறவும் உதவும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

"தமிழகமெங்குமுள்ள மாணவ மாணவியர் - அனைவரும், வானொலி மூலம் ஒலிபரப்பாக இருக்கும் சேர்ந்து பாடுவோம் நிகழ்ச்சியில் இணைந்து பாடிப் பழகிப் பயனடைவர் என நம்புகிறேன். வசதியுள்ள பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டுப் பாடிப் பழகலாம்.

"கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, நாடகம், வினாடி வினா, உரைச்சித்திரம்-போன்ற பல வடிவங்களில் ஒலிபரப்பாக இருக்கின்றன. கடந்த ஆண்டு இதே மாதத்தில் சுமார் 5,000 பள்ளிகளில் மட்டுமே வானொலிப் பெட்டிகள் இருந்தன. ஆனால் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 37,000 பள்ளிகளில், 2,800 உயர்நிலைப் பள்ளிகளிலும், 4,320 நடுநிலைப்பள்ளிகளிலும், 15,550 தொடக்கப் பள்ளிகளிலும் ஆக மொத்தம் சுமார் 22,000 பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. வானொலிப் பெட்டி இல்லாத பள்ளியே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லும் நிலையை அடையும் நாள் வெகுதொலைவில் இல்லை.

"தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் ஹெச். என். எஸ். லாரன்ஸ் அவர்கள் இத்திட்டத்தில் மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். நிதி வசதியுள்ள பள்ளிகளில் ஏற்கெனவே ஒரு வானொலிப்பெட்டி இருந்தா


லும், கூடுதலாக நான்கு டிரான்சிஸ்டர்கள் வரை வாங்கிவைத்து அதிக அளவில் மாணவர்கள் கேட்கும் வசதியைப் பரவலாக்கலாம் என்று கல்வித்துறை சுற்றறிக்கை விட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

''சில பள்ளிகளில் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்க, ஒலிபரப்பாகும் நேரங்கள் வசதியாக இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அத்தகைய பள்ளிகளில் 'ஒலிப்பதிவு நாடா'வில் நிகழ்ச்சியைப் பதிவு செய்து கொண்டு, வசதியான நேரத்தில் மாணவர்களைக் கேட்கச் செய்யலாம்.

''வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளை மாணவர்கள் உன்னிப்பாகக் கேட்பதை ஊக்குவிக்கும் வகையில், வானொலி 'பரிசுத் திட்டங்கள்' ஏற்பாடு செய்திருப்பதை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்குரிய நிகழ்ச்சிகளின் இறுதியில் அந்நிகழ்ச்சிகள் பற்றிய கேள்விகளை அவ்வப்போது ஒலிபரப்புகிறோம். மாணவர்கள் அவைகளுக்கு விடையெழுதி அனுப்ப வேண்டும். ஆண்டு முழுவதும் எழுதும் விடைகள் சேகரிக்கப்பட்டு, சிறந்த விடைகள் எழுதிய மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 6-ஆம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்பு வரை, வகுப்புக்கு இரண்டு பரிசுகள் உண்டு. மாணவர்கள் இப்பரிசுத் திட்டத்தில் உற்சாகத்தோடு ஈடுபட வேண்டுகிறேன்.

''இதுபோன்றே வகுப்பு வாரியாக வழங்கப்பட்டிருக்கும் கையேட்டின் கடைசிப் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் மதிப்பீட்டுத்தாளை மாதிரியாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பற்றிய தங்களது கருத்துக்களை உடனுக்குடன் எழுதியனுப்ப வேண்டுகிறோம். இதன் மூலம் நிகழ்ச்சிகளை மேலும் சிறந்த முறையில் அமைக்க உங்களது நல்ல யோசனைகள் எங்களுக்குப் பயன்படும். அதோடு, சிறந்த முறையில், அதிக அளவில் மதிப்பீட்டுத்தாள்களை அனுப்புகிற உயர்நிலைப்பள்ளி ஒன்றுக்கும் ஒரு நடுநிலைப்பள்ளிக்கும் பரிசு வழங்கப்படுகிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

''கடந்த 1976-77-ஆம் ஆண்டில் நிகழ்ச்சிகளைக் கேட்டு பள்ளிகள் அவ்வப்போது மதிப்பீடுகளை அனுப்பி வந்துள்ளன. அவற்றில் அதிக அளவில் சிறந்த



மதிப்பீடுகளை அனுப்பிய ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் உயர்நிலைப்பள்ளியும், திருச்சிராப்பள்ளி, இடமலைப்பட்டி கலைமகள் நடுநிலைப் பள்ளியும் பரிசுகள் பெறுகின்றன. இவ்விரண்டு பள்ளிகளுக்கும் எங்களது பாராட்டுக்கள்.

''கடந்த ஆண்டில் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு, மாணவர்கள் அதிக அளவில் விடைகள் எழுதிப் போட்டியில் பங்கு கொண்டிருக்கிறார்கள். இப்போட்டியில் வகுப்பு வாரியாகப் பரிசு பெற்றோரின் பெயர்கள் வருமாறு:

## (1) 6-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

ஆர். அனுராதா
ஜி.ஆர்.எம். பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
திருவாரூர்.

**இரண்டாம் பரிசு**

ஜே. மீனுகுமாரி,
சி.எஸ்.ஐ. மெதாடிஸ்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, உறையூர்,
திருச்சி.

## (2) 7-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

ஆர். விஜயா,
கோவிலூர் ஸ்ரீ பெரியநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை.

**இரண்டாம் பரிசு**

எஸ். ஆர். சுந்தர்,
ரங்க கிருஷ்ணன் நடுநிலைப்பள்ளி,
வடகரை, பெரியகுளம்.

## (3) 8-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

இரா. இராஜலட்சுமி,
வடமட்டம் உயர்நிலைப்பள்ளி,
கும்பகோணம்.

**இரண்டாம் பரிசு**

கே. செல்வராஜு
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
காட்டம்பட்டி,
பொள்ளாச்சி வட்டம்.

## (4) 9-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

எஸ். பாக்கியலட்சுமி,
கலைமகள் கல்வி நிலையம்,
ஈரோடு.

**இரண்டாம் பரிசு**

ஜி. லலிதா,
திரு அரங்கநாத முதலியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
திருவாரூர்.

## (5) 10-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

ஏ. ரேணுகா,
கோவிலூர் ஸ்ரீ பெரியநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை.

**இரண்டாம் பரிசு**

லாலி சேவியர்,
கோவிலூர் ஸ்ரீ பெரியநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை.

## (6) 11-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

எஸ். அல்லி,
திரு அரங்கநாத முதலியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
திருவாரூர்.

**இரண்டாம் பரிசு**

டி. உமாவேலம்,
சுப்பையா வித்தியாலயம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

"பரிசு பெற்ற மாணவ மாணவியர்களுக்கு எங்களது வாழ்த்துக்கள்."

**[சென்னை வானொலி நிலையத்தில் 18—7—77 அன்று கல்வி ஒலிபரப்பில் ஆற்றிய உரை.]**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!





| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |







வேலை நேரம் :
உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

# தேசத் தந்தையை நினைவு கொள்வோம்



"குடிப்பழக்கம் ஒரு சமூகத்தீமை அது மனிதனை மிருகத்தின் நிலைக்குத் தாழ்த்தி விடுகிறது. அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது நம் கடமை"

—காந்தியடிகள்




இயக்குநர்;
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.